Registered as a News Paper in Sri Lanka .. பக்கங்கள்: 08 விலை ரூபா; 5-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 03 ( 17 – 05 – 1991 ) வெள்ளிக்கிழமை ஓசை: 88

## க. பொ. த. (சா.) பரீட்சை ஆகஸ்டில் நடைபெறும்?

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் தடைசெய்யப்பட்ட கடந்த ஆண்டுக்கான கல்விப்பொதுத் தராதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது இதற்கான முன்ஏற்பாடுகளை பரீட்சைத் திணைக்களம் ஆரம்பித்திருக்கின்றது. இப்பரீட்சைபற்றி பரீட்சை ஆணையாளர் கருத்து (8 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் விவகாரத்தில் கொள்கைமாற்றமில்லை

## பத்திரிகையாளர் மாநாட்டில் பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதிலோ, புலிகளுடனான உறவிலோ புதிய கொள்கை மாற்றம் எதையும் பின்பற்றவில்லை எனத் தெரிவித்த சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப்பதாக வெளிவந்த செய்திக்கும் மறுப்புத் தெரிவித்தார்.

இந்த மறுப்பினை நேற்றுக் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் அரசு புதிதாகச் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்க முயற்சிப்பதாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகள் தவறானவை என்று குறிப்பிட்ட பிரட்மன் வீரக்கோன தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதிலோ புலிகளுடனான அரசின் உறவிலோ புதிய கொள்கை எதையும் அரசு பின்பற்றவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார். விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனில் பிற தமிழ் அரசியல் கட்சிகளைப் புலிகள் அங்கீகரிப்பதோடு, புலிகள் தமிழர் நலன்களுக்கான ஏகபிரதிநிதிகள் என்ற முறையை ஒரு வழிமுறையாக கொள்ள மாட்டோம் என்று பிரகடனப் படுத்த வேண்டுமென்றும் மீண்டும் வலியுறுத்தி உள்ளார்

## அரச அதிபர் பதவியேற்றார்

யாழ் மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் கே மாணிக்கவாசகர் நேற்றுச் செயலக அலுவலகத்தில் தமது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

செயலகத்தின் அனைத்துப் பிரிவுத் தலைமை அதிகாரிகளையும், பதவிநிலை உத்தியோகத்தர்களையும் நேரடியாகச் சந்தித்து உரையாடிய அரசாங்க அதிபர் அனைத்து அதிகாரிகளையும் உற்சாகமூட்டும் வகையில் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார். (க)

## இன்று சர்வகட்சி மாநாடு

மனித உரிமைகள் பற்றி ஆராயச் சர்வகட்சி மாநாடு இன்று கூட்டப்படுகிறதென (8 ஆம் பக்கம் பார்க்க)

## 1330 இராணுவம் பலி; 3000 பேர் படுகாயம்

(கொழும்பு)

கடந்த பதினொரு மாத காலத்தில் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் இராணுவத்தினர் பொலிஸார் உட்பட 1330 ஆயுதப் படையினர் கொல்லப்பட்டதாகவும் 3000 பேர் படுகாயமடைந்தாகவும் தேசிய பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் பெர்னாண்டோ தெரிவித்தார்

மேலும் அவர் தெரிவிக்கையில் இம்மோதல்களின் போது 6840 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## நமது பேச்சை சிங்களவர் கேட்க வேண்டுமானால் நாம் பலம் பெறவேண்டும் - யோகி

(முல்லைத்தீவு)

சிங்களஅரசுடன் நடாத்தும் பேச்சுவார்த்தை சுகம் போல இருக்கும். ஆனால் பேச்சுவார்த்தைஎன்பதுபுற்றுநோய். உலக அரங்கிலே பணம்பெற வேண்டுமானால் சிங்கள அரசு எம்முடன் பேசும்; எமது போராட்டத்தையும், எமது நிலைப்பாட்டினையும் சர்வதேசங்களுக்கும் எடுத்துரைக்க நாம் பேசலாம். இதெல்லாம் வெற்றி தராது. நாம் பலம் பெற்றால் மாத்திரம், நாம் பேசுவதைச் சிங்களவர்கள் கேட்பார்கள் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெத்தினம் யோகி தெரிவித்தார்

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி சுந்தரலிங்கம் அரங்கில் புதன்று மாலை லெப். கேணல் நவம் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசும்போது யோகி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லெப். கேணல் நவம் அவர்களின் தந்தை ந. செல்லப்பெருமாள் விளக்கேற்றி வைபவத்தைஆரம்பித்துவைத்தார். முல்லை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் செல்வம்மாமா தலைமை தாங்கினார்.

யோகி தொடர்ந்து பேசுகையில், இன்றைய நிலையில் எம்முன் இருக்கிற பிரச்சினைகள் இரண்டு. ஒன்று - மின்சாரம் வரவேண்டும்; லொறிகள் ஓட வேண்டும். இரண்டு- (8 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊர்காவற்படை விவசாயிகளைத் தாக்கிய இராணுவம் மீது தாக்குதல்

(முல்லைத்தீவு)

விவசாயிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடாத்தியபோது தமிழ் ஊர்காவற் படையினர் அவர்களையடித்து விரட்டினர்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இரண்டு மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தனிக்கல்லு முகாமிலிருந்து இராணுவத்தினர் பட்டிக்குடியிருப்பை நோக்கி முன்னேறி வந்து வயலில் வேலைசெய்து கொண்டிருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிச்சாண்டியில் 4 தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

பெரியபுல்லுமலை வெளிச்சாண்டி எனனும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் இம்மாதம் 6 ஆம் திகதி நான்கு அப்பாவிப் பொதுமக்களைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

கணேசன், விசுவன், மகேந்திரன், ஜெகநாதன் ஆகிய நால்வருமே சுட்டுக்கொல்லப் பட்டவர்களாவர்.

## மடு அகதி முகாமிற்கு 50 மெ. தொன் உணவு

(யாழ்ப்பாணம்)

ஐம்பது மெற்றிக் தொன் உணவு பொருள்கள் நேற்று மடு அகதி முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் இருபத்தி நான்காம் திகதி சிறிலங்கா இராணுத்தினர் நடாத்திய ஷெல் தாக்குதலின் பின்னர் நேற்றுத்தான் முதல் முறையாக கொண்டு செல்லப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லேசு)

## வெல்லாவெளியில் தமிழர் விரட்டியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் வெல்லாவெளி, பாலையடி வெட்டை, 14ஆம் கொலனி 35 ஆம் கொலனி ஆகிய இடங்களை சேர்ந்த அப்பாவித் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது தமது இடங்களை விட்டு இடம் பெயர்ந்து பழுகாமம், மண்டூர், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் அகதிகளாக வாழ்க்கையைத் தொடர்கின்றனர்.

இதேவேளை அம்பாறைமாவட்டத்தில் பொத்துவில், வீரமுனை, மல்வத்தை ஆகிய முஸ்லிம் கிராமங்களை அண்டி வாழ்ந்த தமிழ் மக்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினரின் அட்டகாசத்திற்கு அஞ்சி கோமாரி, கல்முனை, கல்லாறு ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள பாடசாலைகளிலும் (8 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தடைப்பட்டிருந்த உயர்தர பரீட்சை வினாத்தாள்கள் வந்து சேர்ந்த விடயம் குறித்து வானொலி தொலைத்தொடர்பு மூலம் பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டதாக கல்வி அதிகாரி தங்கராஜா நேற்று தெரிவித்தார்.

மிகவிரைவில்இந்த பரீட்சைகள் நடாத்தும் திகதி குறித்த செய்தியை பரீட்சையாணையாளர் அறியத்தருவார் எனவும் அவர் கூறினார். (ச)

## வெளியேறிய ராணுவம்மீது கட்டுவனில் தாக்குதல்

(கட்டுவன்)

கட்டுவனில் உள்ள இராணுவத்தினர் காவல் அரணை விட்டு முன்னோக்கி வரும் போது விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை. இராணுவத்தினர் திரும்பி ஓடிவிட்டனர். இச்சம்பவம் நேற்றுமதியம் 12 மணியளவில் இடம் பெற்றது.

## வீரவணக்கம்

### கஜன்

(மட்டக்களப்பு)

தங்கவேலாயுதபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் கஜன் என்ற போராளி மரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளர்.

## பாடசாலைகள் தீவகத்தில் மீண்டும் இயங்க ஏற்பாடு

(வேலணை)

யாழ்ப்பாண நகரப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக இயங்கிவந்த வேலணை, மண்டைதீவு, புங்குடுதீவு சொந்தணிப் பாடசாலைகள் மீண்டும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை அவ்வப் பகுதிகளிலேயே இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறந்த நிலைமை காரணமாக இடம் பெயர்ந்த சகலரும் தத்தமது சொந்தப் பாடசாலைகளுக்குக் கடமைக்குச் செல்லுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் புலேந்திரன் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (14)

**வரிவிளம்பரம்**

தேவை

இலுப்பம் விதை வேப்பம் விதை தேவை. மில் வைற் யாழ்ப்பாணம். (B/2509)

சாய்ந்தவேப்பம் பூ தேவை. மில்வைற், யாழ்பாணம். (B/2517)

யாழ். பல்கலைக்கழகம் இலங்கை

## மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள்/ அறைகள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணபோதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை/ வீட்டின் ஒரு பகுதியினை/ வாடகைக்கு கொடுக்க விரும்பினால் பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரைச் சந்திக்கவும், அத்துடன் அவரிடம் இதற்கெனவுள்ள படிவத்தைப் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 05. 06. 91 இற்கு முன் அவரிடம் கொடுக்கவும்.

—பதிவாளர்.

(B/ 2528)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
திரேசா பிறிஜெட்
நல்லையா

செந்தமிழ் நிலத்தில்
13.06.1940
அந்தகன் நிலத்தில்
17.04.1991

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 17-05-91 காலை 6 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் இதில் பங்குபற்றி அவரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
உறவினர்

(R/1396)

## இன்று பதிவு செய்யவும்

புங்குடுதீவு கோத்தணிக்குட்பட்ட பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் க. பொ. த (உயர்தரம்) கலைவர்த்தகப் பிரிவுகளில் கற்க விரும்புவோர் தமது பெயர்களை இன்று புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அல்லது யாழ் சன்மார்க்க வித்தியாலயத்தில் இயங்கும் புங்குதீவு கோத்தணி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கோத்தணி அதிபர் கேட்டுள்ளார்.

# தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு

(டில்லி)

சுயேட்சை வேட்பாளர் ஒருவர் இறந்தால் அத்தொகுதியில் தேர்தலை ஒத்திவைக்காமலிருக்க வகைசெய்யும்சட்டம் ஒன்றைப் பிறப்பிப்பது பற்றிய அரசாங்கத்தின் யோசனைக்கு பாரதிய ஜனதா தவிர்ந்த ஏனைய கட்சிகள் அனைத்தும் எதிர்ப்புத்தெரிவித்தன.

நேற்றுப் புதுடில்லியில் அரசியல கட்சிகளின் அவசரக் கூட்டத்தில் மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்த ஏற்பாடு யோசனை வியாதிக்கப் பட்டது. இத்தகைய சட்டமூலத்தை ஆக்குவதற்கான காலம் கடந்துவிட்டிருப்பதாக ஜனதாதள் தெரிவித்துள்ளது சுயேட்சை வேட்பாளர்கள் சிலர் தேர்தலைப் பாதுகாப்புக்கு இத்தகைய சட்டமூலம் அச்சுறுத்தலாகவுள்ளதாக நேற்று முன்தினம் புதுடில்லியில் இடம் பெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளனர்

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 17**



அலெக்ஸ்/ அரி
(நாகலிங்கம் அரிகரன் - புங்குடுதீவு

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரமரணமடைந்த

★ **முரளி** (த. முரளிதரன் - நற்பிட்டிமுனை)

★ **பத்மன்** (ம. பரமேஸ்வரன் - நற்பிட்டிமுனை)

1986 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனானநேரடி மோதலில வீரமரணமடைந்த

**அலெக்ஸ் - அரி** (நாகலிங்கம் அரிகரன் - புங்குடுதீவு)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த விமானக்குண்டு வீச்சின்போது வீரமரணமடைந்த

**நிதி** (தி. சிவசிகாமணி - நயினாதீவு)

1988 ஆம் ஆண்டு கட்டைபறிச்சானில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**கலீல்** (இராசாலி கலீல் - தோப்பூர்)

இதே ஆண்டு காரைநீவில் இந்தியப்படை மற்றும் தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**இரசாத்** (காரைதீவு)

1989 ஆம் ஆண்டு இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**இன்சூர்** (நடராசா ஜெயகரன் - கோண்டாவில் வடக்கு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகிறோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு செயற்பட்ட காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2522)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

இன்சூர் என்றவுடன் இன்முகத்தைக் காட்டிடுவாய்
இன்னல்கள் பல வந்தபோதும் இனித்திடவே பேசிடுவாய்
துன்பங்கள் பலவந்து உன் குடும்பத்தை துரத்திடவும் துணிந்து நின்றாய்
இன்னுயிரைத் துச்சமென்று இணைந்து நின்றாய் விடுதலைப் புலியாய்!

கோண்டாவில் ஈன்றெடுத்த கோமகனே ஜெயகரனே! – இந்திய
குண்டர்கள் உனை வளைத்தபோது அவரைத் திண்டாட வைத்தவனே – அவர்
குண்டுகள் உன் உடலைக் குடைந்தபோது அவரிடம்
மண்டியிட்டு மடியில் விழாது மனஉறுதியோடு சைனற்றைக் கடித்தவனே!

ஜெயம் உண்டு பயமில்லை என்றிருந்தோம்
ஜெயித்துவிட்டான் அரக்கன் அன்று!
வீட்டில் நீ இறந்திருந்தால் வீட்டோடு போயிருக்கும் உன்தன் பெயர் – போர்
காட்டில் நீ இறந்ததனால் தமிழ்ஈழ நாள்
ஏட்டில் பதிந்துவிட்டாய் உன் பெயரை – எம் நெஞ்சில்
பாட்டாய் பதிந்துவிட்டாய் படித்திடுவோம் உன் புகழை!!

_கோண்டாவில் மக்கள்



வீரவேங்கை இன்சூர்
(நடராசா ஜெயகரன்)

மாதா மடியில்: 27-09-1971 மண்ணின் மடியில்: 17-05-1989

(B-2531)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்படவேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதேயாகும்.


– ஈ. வெ. ரா. பெரியார்



அன்னையை தந்தையை
ஆருயிரின் சுற்றத்தாரை
சின்னஞ்சிறு வயதில்
இழந்து விட்ட அரும்புகள்!

நெஞ்சில் தீக்கனல் மூண்டிட
பிஞ்சு மனங்கள் பதறிடும் என்றே
அஞ்சுதல் அறியா வேங்கை அணைப்பில்
விஞ்சிடும் அன்பகக் காட்சியிது வன்றோ!

-இனியவன்







இந்திய இராணுவத்தினர் எமது மண்ணின் மூலைமுடுக்குகளிலெல்லாம் திரிந்தகாலத்தில் எமது போராளிகள் ஒரு நடமாடும் குடும்பமாகவே இருந்தார்கள். பிரஷ், தையல்ஊசி, நூல், பிஸ்கட் என்பன இவர்களின் சட்டைப் பையில் எப்போதும் இருக்கும். எமக்கும் எப்போதும் மரணம் வரலாம் என்ற நிலை. இவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களோ ஏராளம். எமது மண்ணின் வரலாற்றை துலக்கமாக எடுத்துச் சொல்லக்கூடிய அந்த நிகழ்வுகள் எழுத்துருவில் வரவில்லை. அவற்றில் அனேகமானவை என்றுமே இனி வர முடியாதவை ஏனெனில் அச்சம்பவங்களில் சம்பந்தப்பட்ட அனைவருமே வீரமரணமெய்தியுள்ளனர் இவற்றைப் பற்றி தெரிந்தவர்கள் யாராவது இதைத் தெரிவித்தால் தான் வெளிவரச் சாத்தியமுண்டு

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பூனையன்தொடுவாயில் நடந்த இந்திய இராணுவத்தின் முற்றுகையும் இத்தகையதே. இம்முற்றுகை 1988ஆம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்றது இம் முற்றுகையில் கரேந்திரன், குட்டி, ராஜாராம், தம்புக்கிளி, கலக்சன் உட்பட பதினொரு போராளிகள் தப்பினர் துரதிஷ்டவசமாக இன்று இவர்களில் ஒருவர்கூட உயிருடனில்லை. கடல், தரை, வான் என்பவற்றால் வடமராட்சி கிழக்குப் பகுதி இரண்டு நாட்களாகச் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

முற்றுகைக்குள் இருந்த பகுதிக்குள் இருந்த இப்போராளிகள் கிராமத்தையொட்டியிருந்த ஏரியில் இறங்கினர். ஏரிக்கு நடுவில் இருந்த சிறிய பற்றைக்குள்தான் இந்தப் பதினொரு பேரும் - மழைக்குள் நனைந்தால் தடிமன் பிடிக்கும் என்று பொத்திப்பொத்தி வளர்க்கப்பட்ட இவர்கள் தண்ணீருக்குள் கிடந்து விறைத்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் விடுதலையின் தேவை இந்த மண்ணுக்கு உண்டு.

இவர்கள் கையில் இருந்ததோ ஒரு பிஸ்கட் பைக்கற்றும், ஒரு நெஸ்ரோ பேணியில் இருந்த உழுத்தம் மாவும் தான் எமது நாட்டு நாய்களுக்கே பிடிக்காத அந்த மொழி மிக அருகில் கேட்டுக்



கப்டன்
கரேந்திரன்

கொண்டிருந்தது. தமதுமொழியை தாம் பேசமுடியாதநிலை போராளிகளுக்கு. பிஸ்கட் பைக்கற் உடைக்கும் சத்தம் கூட வெளியில் கேட்டுவிடக் கூடாது என்ற அவதானத்துடன் பிஸ்கட்டைப் பிரித்து காய்ந்துபோயிருந்த தொண்டைக்குள் தள்ளினார்கள். விக்கல் எடுக்கக்கூடாது என வேண்டிக் கொண்டார்கள். நேரம் செல்லச் செல்லப் பசி வயிற்றைப் பிடுங்கியது. வேறு வழியின்றி ஏரியில் ஓடிக் கொண்டிருந்த தண்ணீரைக் கைகளால் அள்ளி உழுத்தம் மாவைக் குழைத்து அனைவரும் பங்கிட்டு உண்டு சேற்று நீரைக் குடித்து அன்றைய பொழுதைக் கழித்தனர். இச்சம்பவம் அவர்களுடைய அனுபவத்தில் சிறதுளியே

எமது இருப்பை உறுதி செய்வதற்கான இந்தப் போராட்டத்தில் கரேந்திரன் இது போன்ற பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறான். விடுதலையின் தேவைக்காக இவன் கால் பதித்த தூரம் மிக அதிகம் திருக்கோணமலை, மன்னார் என பல்வேறு பகுதிகளிலும் இவனது துப்பாக்கி குறி பார்த்தது: போராடுவது மட்டுமே இவனது கடமையாக இருக்கவில்லை. 'பல போராளிகளை உருவாக்குவதும் உனது கடமை' என வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை இவனுக்கு ஒரு பயிற்சி முகாமை அமைத்துக் கொடுத்தார். அங்கே பல போராளிகள் உருவாகினார்கள்.

வடமராட்சியில் நிகழ்ந்த ''ஒப்பரேஷன் லிபரேஷன்'' இவனது பயிற்சிமுகாம் பணியை இடைநிறுத்தியது மீண்டும் அம்மண்ணை விடுதலை பெற்ற பிரதேசமாக மாற்ற இடைவிடாது உழைத்தான் இவன். கரும்புலிகப்டன் மில்லரின் அதிவேகத் தாக்குதலினால் சின்னா பின்னமாக பறந்த கட்டடத்தின் பகுதிகள் வானத்திலிருந்து கீழே விழுந்த கணமும் எதிரியின் ஆயுதங்களை இவன் கைப்பற்றியதற்கும் இடைப்பட்ட நேரம் மிகச் சில வினாடிகளே மில்லரின் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் வடக்கில் சிறிலங்காப்படைகள் முகாமில் பதுங்கிக்கொண்டிருக்க இந்தியப்படை தமிழின அழிப்பை தற்காலிகமாகப் பொறுப்பேற்றது. கரேந்திரனின் துப்பாக்கி இந்தியப்படையினரில் கணிசமானோரைச் சடலங்களாக அவர்களது நாட்டிற்கு அனுப்பி வைத்தது. இதனால் கரேந்திரனைத் தேடிக் களைத்துக்கொண்டிருந்தனர் இந்திய இராணுவத்தினர். ஆனால் இவனோ இந்திய முகாமுக்கு மிக அருகிலேயே நடமாடிக் கொண்டிருந்தான். ஒரு நாள் ஒரு துரோகியின் இறுதி நாளை நிர்ணயிப்பதற்காக முகாமுக்குள்ளே கூடச் சென்றான். வீட்டு நினைவில் நின்ற இந்திய வீரனின் கண்ணில் மண்ணைத் தூவுவது இவனுக்குச் சிரமமாக இருக்கவில்லை.

1988 மே 13 ஆம் திகதி கேரள மாநிலத்தவனான துளசி என்ற இந்தியப்படை முகாமின் பொறுப்பதிகாரிக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ளத் தீர்மானித்தான் இவன். இந்தத் துளசி என்பவன் பல பாலியல் வன்முறைச் சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருந்தவன் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடலுக்குப் போகக் கூடாது என சில காலம் தடை விதித்தவன் சில சமயங்களில் கடற்றொழிலாளர்களிடம் வரியும் அறவிட்டவன். ஆகவே தாலையடி என்பது இந்தியாவின் பகுதியல்ல. எங்கள் நாட்டுப் பெண்கள் உங்களுக்குக் கொத்தடிமைகளுமல்ல என்பதை துளசிக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் உணர்த்த இவனும் சில தோழர்களும் புறப்பட்டனர். இவர்கள் செல்லும் பகுதி இராணுவத்தால்சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறது என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

முற்றுகைக்குள் அகப்பட்ட கரேந்திரன் தனது 203 துப்பாக்கியின் ஷெல்கள் சிலவற்றை எதிரிகளை நோக்கி ஏவினான் தொடர்ந்துநடந்த சண்டை இவனை எம்மிடமிருந்து பறித்தது. உயிர் போவதற்கு முன்னர் கூட 203 ஐக் கொண்டு தப்பிவிடு என்று உத்தரவு போட்டு விட்டுத் தான் மறைந்தான் இவன். துப்பாக்கியின் தேவை தெரியும் இவனுக்கு. ஏனெனில் அது தான் தமிழினத்தின் வரலாற்றை பெருமையோடு உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தது என்பதை இவன் அறிவான். வரலாற்றுக் கடமையை சரிவரச் செய்தேன் என்ற திருப்தியுடன் இவன் தமிழீழ மண்ணை முத்தமிட்டான்; ☆

## செய்மதிகளின் இயக்கத் தத்துவம்

மலை உச்சியிலிருந்து கிடையாகச் சுடப்படும் பீரங்கிக் குண்டானது தரையில் குறித்தளவு தூரத்தில் சென்றுவிழும். சுடப்படும் வேகம் அதிகரிப்பின் அது கூடியளவு தூரம் சென்று விழும். சுடப்படும் வேகமானது பூமிக்கு ''வெளியே'' குண்டை வீசுமானால் அது பூமியைச்சுற்றி ஒரு வட்டப்பாதையில் இயங்கும். இதுவே செய்மதிகள் (சட்டலைட்ஸ்) இயங்குவதற்கான அடிப்படைத் தத்துவமாகும். இது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் நியூட்டன் என்னும் விஞ்ஞானியால் முன்வைக்கப்பட்ட கொள்கையாகும்.

நடைமுறையில் வளித்தடை காரணமாக வேகம் குறையும். எனவே வளித்தடை குறைந்த உயரத்தில் வைத்து ஒரு பொருளுக்கு பொருத்தமான கிடைவேகம் அளிக்கப்படுமானால் அது தொடர்ந்து மாறாவேகத்துடன் வட்டப்பாதையில் இயங்கும்.

1945 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் விஞ்ஞான எழுத்தாளராகிய ஆதர் சி. கிளார்க் என்பவர் செய்மதி மூலம் தகவல் தொடர்புகளை விருத்தி செய்யும் வகைகள் பற்றி சில கருத்துக்களை முன்வைத்தார். பூமியின் இயக்கத்திற்கு ஒத்ததாக, அதாவதுஒரு முறை பூமியைச் சுற்ற எடுக்கும் நேரம் 23 மணி 56 நிமிடமாக இருக்கும் ஓர் செய்மதி பல காலம் தொழிற்படக்கூடிய தகவல் தொடர்பு சாதனங்களை கொண்டிருக்குமாயின் அது பூமியின் ஓரிடத்திற்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கும் ''அன்ரனா''விற்கு ஒத்ததாக இருக்கும் எனத தெரிவித்தார். இவ்வாறான இயக்கம் நடைபெறுவதற்கு அது பூமியிலிருந்து 35,800 கி.மீ தூரத்தில் இயங்க வேண்டும்

இவ்வாறான ஓர் செய்மதி ஒக்ரோபர் 1960இல் ''சின்கொம் I'' என்ற பெயரில் அமெரிக்காவினால் பரீட்சிக்கப்பட்டது.

இங்கு மிகவும் முக்கிய விடயம் என்னவெனில் செய்மதிகளுக்கு ஆரம்பவேகம் கொடுக்கப்பட மட்டுமே எரிபொருள் தேவைப்படுகிறது.

எவ்வளவு உயரத்தில் இவை இயங்கியபோதும் சிறிதளவாவது தடை இருக்கவே செய்யும். எனவே இவற்றின் வேகம் குறைந்து செல்லும்போது அவை புவியின் மையத்தை நோக்கிக் கவரப்பட்டு குறைந்த உயரத்தில் இயங்கும். பொதுவாக அவை பூமியை நோக்கி விழும்போது உராய்வினால் எரிந்து முற்றாக இல்லாது போய்விடும்.

# நினைவு நல்லது வேண்டும்

சிறுகதை

இளையபாரதி

காலை விடிந்ததே தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தான் இனியவன். சகநண்பர்கள் எல்லாம் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து சிறிது நேரம் உடற்பயிற்சி செய்து விட்டு, தங்கள் தங்கள் வேலையில் முனைப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நேரம் காலை ஒன்பது ஆகி விட்டது. சுவர் மணிக்கூடு 'டாண்' என்று ஒரு ஒலியை மட்டும் எழுப்ப ஓய்ந்தது. காலை பத்திரிகைகள் இனியவனுக்காகக் காத்து கொண்டிருந்தன. பத்திரிகைகள் ஒவ்வொரு நாளும் நேரம் தவறாது வந்து விடும். அப்படி வர வைத்தவர் அவர்களுடைய பொறுப்பாளர் தான். அவர் மிகவும் கண்டிப்பானவர். ஒரு நாள் பத்திரிகை பார்க்கவில்லை என்பதற்காக அங்கிலுள்ள கடையில் பத்திரிகை வாங்க வேண்டாம் என்றும் பத்திரிகை காரியாலயங்களுக்குச் சென்று பத்திரிகைகளை வாங்கி வரவேண்டும் அப்போது தான் இவ்வளவு நேரம் செலவழித்து வாங்கி வந்த பேப்பரை நாங்கள் படிக்க வேண்டும் என்ற சிந்தனை உங்களுக்கு வரும். பேப்பர் படிப்பதனுடைய முக்கியத்துவம் விளங்கும் என்றும் கூறினார்.

முகாமிற்கு பத்திரிகை வந்ததும் முதலில் பத்திரிகை படிப்பவன் இனியவன் தான். இன்று எல்லோரும் படித்து முடிந்தும் பத்திரிகை அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவன் இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். அந்த முகாமிலேயே வயதில் மிகவும் இளையவனான நகீரன் தங்களது முகாம் பொறுப்பாளரிடம் 'இனியவன், அண்ணா ஒவ்வொரு நாளும் வேளைக்கு எழும்புகிறவர். இன்றைக்கு இன்னமும் எழும்பவில்லை. எனக்கு எழுப்ப விருப்பமில்லாமல் இருக்கிறது'' என்று மிகவும் கவலைப்பட்டுக் கூறினான்.

முகாம் பொறுப்பாளர், ஒரு குழந்தையின் தாயானவள் தன் மகவுக்கு ஒரு துன்பம் என்றால் எப்படி துடிக்கிறாளோ அது போல இனியவனின் அருகில் சென்று அவனது தூக்கம் கலையாது இருக்கவேண்டும் என்பதற்காக, சத்தப் படுத்தாமல் அவனது நெற்றியில் கையை வைத்தார் காய்ச்சல் இருக்கிறதா என்பதை கணிப்பதற்காக. பொறுப்பாளருக்கு ஆச்சரியமாக இருந்தது. இனியவன் தன் நித்திரையைத் தவிர முழு நேரமும் இந்தத் தமிழீழ மண்ணின் பாதுகாப்பிற்காகவும், மக்களின் பாதுகாப்பிற்காகவும், சோர்வின்றி உழைப்பவன் நித்திரை நேரத்தைக் கூடக் குறைத்து இந்த மக்களின் துன்பங்களும், துயரங்களும் சோதனைகளும். வேதனைகளும் தீர தடையாக இருப்பவைகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருப்பவன். உடல் வெப்பமும் அளவாகத் தான் இருக்கின்றது. இவன் ஏன் இன்று இன்னமும் தூங்குகின்றான்.

கை ஸ்பரிசித்ததும் கண் விழித்துக் கொண்டான் இனியவன். "என்னண்ணை எனக்கு காய்ச்சல் என்று நினைத்தீர்களோ''? என்று கேட்டவனை ''இல்லையடாப்பா வழமைக்கு மாறாகத் தூங்கிக்கொண்டிருந்தாய். அது தான் எனை வந்து பார்த்தனான்'' என்றார் பொறுப்பாளர்.

''இல்லை அண்ணை இரவு தூக்கமே வரவில்லை. உருண்டு உருண்டு படுத்து அதிகாலையில் தான் தூக்கம் வந்தது. இந்தச் சனங்கள் எத்தினை ஆண்டுகளாக, இந்த நாட்டில் உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். ஆனால் இன்னமும் தான் இவங்களின்ர பாடு இல்லை'' என்றான் இனியவனின் கவலையைக் கேட்ட பொறுப்பாளர் ''நீ இந்தச் சனங்கள் என்று இப்படி எல்லோரையும் சேர்த்து கதைக்கக்கூடாது மச்சான். போராட்டம் நடந்த எல்லா நாட்டிலும் வரலாறுகளை எடுத்துப்பார், எங்கும் போராட்டத்திற்கு உதவாதவர்களும், எதிரானவர்களும் இருந்து தான் இருக்கிறார்கள். இவர்கள் ஒரு பத்து வீதம்தான் இருக்கும் இதைப் பார்த்து இப்படி வேதனைப்படுகிறாயடாப்பா மிச்சம் தொண்ணூறு வீதத்தையும் நினைத்துப் பார்'' என்றார்.

''அது சரி அண்ணை இவர்கள் ஒரு முற்போக்குவாதியாகவோ அல்லது முன்னணி வீரர்களாகவோ ஆகவேண்டாம். ஆனால் இவர்கள் மனிதனாகக் கூட ஆகவில்லை அதனால் தான் அண்ணை துக்கப்பட்டனான்.'' என்றான் இனியவன்.

'ஏன்டாப்பா அப்படி என்ன பிரச்சினை''என்றார் பொறுப்பாளர். இனியவன் முதல் நாள் வீடு எடுக்கச் சென்றபோது நடந்த சம்பவத்தைத் தனது பொறுப்பாளருக்கு விபரித்தான்.

நேற்று நான் ஒரு வீடு தேவை என்பதற்காக உரும்பராய் சென்றிருந்தேன். நான் போன அந்த வீட்டிலிருந்த குடும்பத்தின் தலைவர் மிகவும் படித்தவர். வயது கூட முப்பதுகளாகத்தான் இருக்கவேண்டும் பண்பானவர் போல் தோற்றமளிப்பார், பெயரை நாங்கள் கந்தசாமி என்று வைத்துக்கொள்வோம். தான் வேலை செய்யும் கொம்பனியில் உயர்பதவியில் இருக்கிறேன் எனக்கூறிக் கொண்டார்' ஆனால் பின்னர்தான் புரிந்தது மனிதப் பதவியை அவரிடம் காணவில்லை என்பது. கொம்பனிக்கு போய் வருவதற்கு இலகுவாக, உடுவிலில் இருந்தவர்கள் உரும்பராயில் வந்து குடும்பமாக குடியிருக்கிறார்கள். இவர்களுடைய வீடல்ல வாடகை வீடு தான். அந்த வீடு எங்களுடைய தேவைக்கு ஏற்றது போலிருந்தது. அத்துடன் பல காரணங்களை முன்னிட்டு அந்த வீட்டிலிருக்கத் தீர்மானித்தோம். எனவே அவர்களுக்கு மாற்று வீடு ஒன்றும் ஏற்பாடு செய்து போட்டு கந்தசாமி அண்ணையிடம் சென்று கதைத்தோம்.

அண்ணை இந்த வீட்டில் நாங்கள் கொஞ்ச நாட்கள் இருக்க வேண்டிய தேவை இருக்கிறது நீங்கள் அதற்கு உதவுவீர்கள் என நம்புகிறோம். உங்களுக்கு நாங்கள் இதிலிருந்து ஒரு ஐந்நூறு யார் தூரத்தில் இதை விட ஒரு நல்ல வீடு இருப்பதற்கு ஏற்பாடு செய்து தருகிறோம், என்று கூறினோம்.

கந்தசாமி அண்ணர் இந்த வீட்டிற்கு வாடகையும் கொடுப்பதில்லை. இந்த வீட்டைச் சொந்தமாக்க நினைத்தாரோ என்னவோ, தம்பியவையள் நான் போராட்டத்திற்கு என்னாலான எல்லா உதவியும் செய்தனான். ஆனால் இந்த உதவியை மட்டும் கேட்காதையுங்கோ என்றார். அப்படி நீங்கள் எடுக்கிறது என்றால், என்னைச் சுட்டுப் போட்டு எடுங்கோ என்றார்

பொறுப்பாளர் கேட்டார். இதுக்கு நீ என்ன மச்சான் சொன்னனி. இனியவன் தொடர்ந்தான். கந்தசாமி அண்ணை நீங்கள் உப்படிக் கதைக்கக் கூடாது நீங்கள் என்னை விட வயதில் கூடியவர். இருந்தாலும் நான் உங்களுக்கு ஒரு சிறிய கதை சொல்கிறேன் கேளுங்கோ. வட இந்தியாவில் அகமதஷா என்றொரு மன்னன் இருந்தவனாம் பிரிட்டிஷ்காரர் அவனது நாட்டைப் பிடித்ததும், அவர்களுக்கு எதிராக அவன் கெரில்லாப் போராட்டம் நடத்தினானாம். ஒருமுறை அவன் கங்கையைக் கடக்கும் போது பிரிட்டிஷ்காரனின் துப்பாக்கிக்குண்டு அவனது கையில் பட்டுவிட்டதாம் அவனது கை இனிப் பாவிக்க முடியாது என்று உணர்கிறான் உடனே உடைவாளை எடுத்து தனது கையை வெட்டி, தாயே என் தாய்நாட்டிற்காக நான் தரும் முதல் காணிக்கை இது என்று சொல்லி கங்கையில் வீசினானாம். என்னண்டால் அண்ணை அவன் உடலின் ஒரு பாகத்தைக் கொடுத்து முதல் காணிக்கை என்கிறான் நான் நினைக்கிறேன் நீங்கள் மண்மீட்பு நிதியோ. அல்லது வேறு சிறு உதவியோ செய்திருக்கிறீர்கள். அதுதான் உங்களாலான முழு உதவியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்றேன்.

இவ்வாறு நீண்ட விவாதங்களின் பின்னர் கந்தசாமி அண்ணர், ''நான் ஒருமுறை அரசியல் பொறுப்பாளர் நரேஷ் தம்பியைக்கண்டு கதைத்துப் போட்டு வீடு மாறுகிறேன், தம்பி'' என்று சொன்னார்.

நரேஷ் அண்ணா அவர்களும் அவ்விடத்திற்கு வந்து கந்தசாமி அண்ணருடன் பலவாறு கதைத்து விளங்க வைத்தார். பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். நீங்கள் என்னை இருக்க விடப்போற வீட்டைப் பார்ப்பம் என்று சொல்லி அந்த வீட்டிற்குச் சென்றோம். வீட்டைக் கவனித்த அவர் இந்த அருமையான வீட்டிலை நீங்கள் இருக்கிறது தானே ஏன் தம்பி என்னை இங்கே வரச்சொல்கிறீர்கள் என்றார். இதற்கு பல காரணங்கள் இருக்கிறது அண்ணை அவை எல்லாவற்றையும் குறிப்பிட முடியாத நிலையில் உள்ளோம், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறோம் இது பிரதான வீதியில் அமைந்திருக்கிறது அண்ணை என்றோம்.

சரி தம்பியவை நாங்கள் இங்கே வந்து இருக்கிறோம். கிணறு தான் பங்குக் கிணறாய்ப் போச்சு உங்களுக்கு விளங்கும் என்று நினைக்கிறன் நான் மற்றவர்களுடைய பசாலி இல்லாமல் இருக்க வேணும். நாங்கள் சொன்னோம் அண்ணை அவர்கள் தண்ணி அள்ளுவதால் ஒரு துடக்கும் வராதண்ணை அது ஒன்றும் பிரச்சினையில்லை.

அது மட்டுமில்லை தம்பி எலெக்ட்ரிசிற்றியும் இல்லாத காலமாய்க் கிடக்கு, கிணறுக்கு துலா இல்லை. நான் நிண்டால் தண்ணி அள்ளிக் கொடுப்பேன். நான் வேலையின் நிமித்தம் இன்னும் இரண்டுமூன்று மாதத்திலை கொழும்புக்கு றான்சர் வரும்போல கிடக்கு. அதுதான் நான் அங்காலை போனால் மனிசி தண்ணி அள்ள கஷ்டப்படும். இருந்தும் நாங்கள் பொறுமையாக அண்ணை இதிலை துலா போடக்கூடிய இடம் இல்லை ஆனபடியால் கப்பி போட்டுத் தாறம் அண்ணை என்றோம். கப்பியும் தம்பி தண்ணி அள்ள கஷ்டம் தான் துலா மாதிரி வராது என்றார். இங்கே எத்தனையோ மக்கள் உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை, இருக்க வீடில்லை, இவர்களுக்கு கிணற்றுக்கு துலா இல்லை என்று கவலை என்று நான் எண்ணிக் கொண்டேன்,

பொறுப்பாளர் சொன்னார். அட இனியவன், முதல் முதல் பூமி உருண்டை என்று சொன்னவனை உயிருடன் கட்டிப்போட்டு கொளுத்தினவங்களாம்; அது போலதான் இந்த ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கும் போது மிகச் சிறுபான்மையே அதை ஏற்றுக் கொண்டது இன்றைக்கு சூழ்நிலை மாறி பெரும்பான்மை எமது போராட்டத்திற்கு பங்களிப்பு செய்யுது. மிகமிகச் சிறுபான்மை தான் தொல்லை கொடுக்குது இது புறக்கணிக்கத் தக்கது.

அண்மையில் நல்லூரில் நடந்த மேதினக் கூட்டத்தைப் பார்த்தனீ தானே திரண்டிருந்த மக்கள் வெள்ளம் உனக்கு புதுக்கதை புனைந்திருக்கும்.

நீ கந்தசாமியைக் கண்டு கலங்குகிறாய். நேற்று நெடுங்குளத்திலிருந்து அருணம்பலம் என்பவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஏற்கனவே இரண்டு கடிதம் எழுதிவிட்டாராம் தன்னையும், மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் இயக்கத்தில் சேர்க்கும் படி. நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையாம், கதைத்து போட்டு பகுதி நேர வேலைக்கு விட்டு விட்டோமாம். இக்கடிதத்துடனாவது தன் குடும்பத்தை இயக்க முழுநேர அங்கத்தவர்களாக சேர்க்காவிடில் சாகும் வரை உண்ணா விரதமாம் இவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள், கந்தசாமி போன்றவர்களும் இதே மண்ணில் தான் வாழ்கிறார்கள் என இருவரும் பேசிக் கொண்டார்கள்



கவிதை

## சந்தோசம் அதிகம்

முன்பக்க மதிலோரத்தில்
எங்கள் கடைசி நேர
சந்திப்பு
உன் இதயம்
அழுதகற்கு சாட்சியமாய்
விழி ஓரங்களில்
ஈரக்கசிவுகள்.
போகின்றேன்,
என அனுமதியில்லாத - உன் முடிவு
காதலை விட கடமைகள் தான்
உன் கண்களில் நின்று
கையசைத்தன
சின்னதாய் ஒரு
விழி அசைப்பில் — விடைபெற்றாய்
உன் கண்களில் சோகத்தை
இனங்காண முடிந்தாலும் - இறுதியான
பிரிவின் வேதனைகளுடன்
உதடுகள் துடித்தாலும்
இவற்றை எல்லாம் - விட
போராடப் போகும்,
சந்தோசம் தான் அதிகம்
இது பொறாமையாக, இருந்தாலும்
எனக்கு பிடித்திருக்கிறது
கனவுக்கு வயதில்லை.
காதலுக்கு அழிவில்லை
சுதந்திரக் காற்றில் - நம்
சுதந்திர உள்ளங்கள் — கலக்கட்டும்

இ - சிவானந்தினி

## உலகின் மிகச் சிறிய நாடு

உலகின் மிகச் சிறியநாடு மொனாக்கோ (Monaco) 1.9 சதுர கி.மீ பரப்பளவையும் 29.000 மக்கட் தொகையையும் கொண்டதாகும். ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின்கீழ் உள்ள இது பிரெஞ்சை உத்தியோக மொழியாகக் கொண்டுள்ளது. இங்கு 60 சதவீத பிரெஞ்சு மொழி பேசுவோரும் இத்தாலி ஆங்கிலம் முதலிய மொழிகளை பேசுவோர் ஏனையோராகவும் உள்ளனர். மதரீதியில் 90 சதவீதம் ரோமன் கத்தோலிக்கர் ஆவர். இங்குள்ள மொத்தப் பாதையின் நீளம் 46கி.மீ. ரெயில் பாதையின் நீளம் 2 கி.மீ ஒரேயொரு விமான சேவையையும் கொண்டுள்ளது. இங்கு 2 தினசரி பத்திரிகைகள் வெளியாகின்றன. இவற்றின் மொத்த விற்பனை 11 000 ஆகும். முக்கிய தொழிலாக மீன்பிடி மற்றும் கடற்றொழில்கள் விளங்குகின்றன. 63 வைத்தியர்களைக் கொண்டுள்ளது. இங்கு மன்னராட்சி நடைபெறுகிறது.

# 1942இல் ஜப்பான் நீர்மூழ்கி மூழ்கடித்த

# இலங்கை தமிழரின் "இலட்சுமி கோவிந்தா"

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது வங்காள விரிகுடாவில் வைத்து இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான 'இலட்சுமி கோவிந்தா' எனனும் மரக்கலம் ஜப்பானிய நீர்மூழ்கியால் மூழ்கடிக்கப்பட்டது. இம்மரக்கலம் மூழ்கடிக்கப்பட்டபோது அதில் தலைமைமாலுமியான நீக்கிலாப்பிள்ளை உட்பட 27 மாலுமிகள் இருந்தார்கள். அத்தோடு அவர்கள் பர்மாவில் இருந்து ஏற்றி வந்த 6000 மூடை அரிசியும் இருந்தது.

இக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டு இவ்வருடம் ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. இதனை முன்னிட்டு 'அஞ்சா நெஞ்சுடன் அலைகடலில் திரிந்துலவும் வடபகுதி மாலுமிகள்' என்னும் தலைப்பில 1957 ஆண்டு தினகரனில் வெளியாகிய என். எஸ். அரசரெத்தினம் என்பவரது கட்டுரை முழுமையாகப் பிரசுரமாகிறது.

என். எஸ். அரசரெத்தினம்

கப்பல் தொழிலிலும் கடல் தொழிலிலும் இலங்கையிலேயே கைதேர்ந்தவர்கள், ஊர்காவற்றுறை மக்கள் என்பது எவரும் அறிந்த உண்மை. அன்றுதொட்டு இன்றுவரை மரக்கலங்களில் இந்தியாவரை சென்று ஏற்றுமதி இறக்குமதி செய்பவர்கள் இவர்களே. இவர்களின் மரக்கலங்களில் ஒன்றே ''இலட்சுமி கோவிந்தா'' என்பது. இந்த 1941 ஆம் ஆண்டு தனது வழமையான வர்த்தகத்தைச் செய்வதற்காக யுத்தம் நடைபெறுவதையும் பொருட்படுத்தாது மாலுமித் தொழிலிலே திறமையும் அனுபவமும் வாய்ந்த திரு நீக்கிலாப்பிள்ளை என்பவரோடும், அவரின் கீழுள்ள இருபத்தொரு கப்பற் சிப்பந்திகளோடும், தனது முழுப் பாய்களையும் விரித்துக் கொடியை உயர்த்தி வெகு வேகமாய் இந்தியாவின் துறைமுகங்களிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற அரக்கன் துறைமுகத்தை நோக்கிச் சென்றது. மாலுமியின் அனுபவத்திறமையினால், கடலிலே விதைத்திருந்த கண்ணிகளால் ஆபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை.

அரக்கனை அடைந்ததும் அங்கு சில மாதங்கள் தங்கி ஆறாயிரம் அரிசி மூடைகளை ஏற்றிக்கொண்டு 1942 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2ஆம் திகதி, தமது தாய்நாடாகிய இலங்கையை நோக்கிப் புறப்பட்டது. புறப்பட்டுவரும் வழியில் காலத்துக்கேற்ற கோலத்தில் காற்று வீசாத படியினால் வங்காள விரிகுடாவை நோக்கிச் செலுத்தாது, அக்கியாப்பூருக்குத் தெற்கேயும், அந்தமான் தீவுக்குச் சற்று அருகாமையிலும் கப்பல் செல்ல வேண்டியதாயிற்று. தற்போது இங்கு கப்பல் வழிகொள்ளும் பாதையே பகைவரின் நடமாட்டத்துக்கு உறைவிடமாய் இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானியர் தாக்குதல்

பங்குனி மாதம் 10 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் கப்பல் சிப்பந்திகள் வெகுதூரத்தில் ஓடம்போல் ஒன்றைக் கண்டார்கள். சிப்பந்திகள் ஆச்சரியமிகுதியால் அதை உற்றுநோக்கிக்கொண்டிருந்தார்கள். ஏனெனில் அந்தக் கரைகாணாச் சமுத்திர மத்தியில் ஓர் ஓடத்தையோ வள்ளத்தையோ காண்பதரிது. ஓடம்போலத் தோன்றிய ஜப்பானியரின் நீர்மூழ்கிக் கப்பல் நம் ''இலட்சுமி கோவிந்தா'' வை நோக்கி வெகு விரைவாக வந்துகொண்டிருந்தது. பின் கப்பலே மறைந்துவிட்டது. மாலுமிகள் இது நீர்மூழ்கிக் கப்பலாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அல்லாமலும் அக்கப்பல் ஒரு நேசதேசக் கப்பலாய்த்தான் இருக்கவேண்டும் என்று எண்ணியவண்ணமிருக்கையில் திடீரென்று நம் கப்பல் ''இலட்சுமி கோவிந்தா'' விலிருந்து நூறு யாருக்கப்பால் கடலிலிருந்து கிளம்பியது. சிப்பந்திகள் எல்லோருக்கும் ஒரே ஆச்சரியமாய்ப் போய் விட்டது. ''இளங்கன்று பயமறியாது'' என்பதுபோல எல்லோரும் கூடிநின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் ஆனால் போர்க்கப்பலில் நின்ற குறிய மக்களைக் கண்டதும் இவர்கள் ஜப்பானியராயிருப்பார்களோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கையில் அக்கப்பலிலிருந்து ஒரு பயங்கர வெடிகுண்டு இவர்கள் பாய்களையும் மரங்களையும் ஊடுருவிக்கொண்டு பயங்கர சத்தத்துடன் சென்றது.

உடனே இவர்கள் தாங்கள் நிராயுதபாணிகள் என்றும் போரிடும் நோக்கம் தமக்கில்லை என்றும் விரும்பினால் கப்பலையே சோதனை போட்டுப் பார்க்கலாமென்பதையும் அறிவிக்கும் முகமாகக் கப்பலின் பாய்கள் அத்தனையையும் இறக்கிவிட்டார்கள். இருந்தும் அக்கொடியவர் மனம் கசியவில்லை. மனிதனை மனிதன் ஈவு இரக்கமின்றிக் கொலைவது அக்கல்நெஞ்சவெறியருக்கு ஒரு விளையாட்டாயிருந்தது போலும். இங்கு கொதிக்கும் உள்ளங்கள் அங்கு குதிக்கும் குட்டையர்கள் மனிதன் சில சமயங்களில் எவ்வித மிருகத்திலும் கேடாக மாறிவிடுகிறான் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. மீண்டும் ஒரு குண்டு இவர்களின் கப்பலுக்குள் பாய்ந்தது. அது கப்பலின் சமையலறையிலிருந்த சிப்பந்தியொருவரின் காலைப் பிளந்ததுமல்லாமல் கப்பல் தளத்தில் நின்ற அனைவருக்கும் படுகாயமேற்படுத்தி விட்டது. அத்தோடு ஏற்றிவைத்திருந்த இரு ஓடங்களில் ஒன்றையும் சிதறடித்துக் கொண்டு சென்றது. அடுத்த கணம் மூன்றாவது குண்டும் கப்பலின் தண்ணீர் மட்டத்தில் பாயவே கப்பலும் தண்ணீருக்குள் வெகு விரைவில் மூழ்கத் தொடங்கியது. இந்நேரத்தில் இவர்கள் திக்கற்றவர்களாயும் நிராயுதபாணிகளாயும் இருந்தார்கள். ஆகையால் ஒரு புலி பூனையைக் கொல்லுவதுபோல ஜப்பானியர் இவர்களைச் சிதைத்து விட்டுச் சென்றார்கள். மூன்றாவது குண்டு பாய்ந்து கப்பல் கடலுக்குள் மூழ்கத் தொடங்கிய போதுதான் பகைவர் ஜப்பானியர் என்பதை நன்றாயறிந்தார்கள்.




''இலட்சுமி கோவிந்தா'' என்னும் மரக்கலத்தின் மாலுமியான திரு. நீக்கிலாப்பிள்ளை.

## கப்பல் தலைவர் காட்டிய உறுதி

கப்பல் கடலுள் மூழ்கிக்கொண்டிருந்தது. கப்பல் தலைவரின் இரு புதல்வர்களும். மற்றும் சிப்பந்திகளும் தலைவரைப் பற்றிக்கொண்டும் கொடியிழந்த கொம்பு போலவும், ஆனைவாய்க் கரும்பு போலவும் அலறினார்கள். கப்பல் கடலில் மூழ்கினால் காப்பாற்ற ஆதாரமொன்றுமில்லையே என்பதை நினைத்தவுடன் அவர்கள் இதயம் நின்றுவிடும்போலிருந்தது, அங்குமிங்கும் தேடினார்கள், ஏதாவது பெருமிதப்பங்களைத் தேடிக்கொள்ள செய்வதின்னதென்று அறியாது திகைத்தார்கள், கப்பலிலிருந்த இரு சிறு தோணிகளில (மச்சுவாய்கள்) ஒன்று குண்டுபட்டுச் சிதைவுற்றது, மற்ற அடைப்பமும் படகின் கயிற்றில் சிக்கி விட்டதால் அதை வெளியிலெடுக்கவோ, அல்லது அசைக்கவோ முடியாத நிலையிலிருந்தது. இந்நிலையில் கப்பலும் மூழ்கிக்கொண்டே இருந்தது. இவ்வளவு ஆபத்து அல்லோலகல்லோலத்திலும் மாலுமி நீக்கிலாப்பிள்ளை மட்டும் ஒன்றையும் பொருட்படுத்தாது, மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலின் தளத்தில் நின்றுகொண்டே தனது இஷ்ட தெய்வத்தின் சொரூபத்தைக் கையில் ஏந்தியவாறு கண்ணை மூடிக்கொண்டே தியானித்துக் கொண்டிருந்தார். மற்றச் சிப்பந்திகள் அவரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு மிதப்பை எடுத்துக்கொடுத்து உயிரைக் காப்பாற்றுவதற்கு வேண்டியதைச் செய்யும்படி கூறியதற்கு, ''என் கப்பலை விட்டு ஒரு அடிகூட எடுத்து வைக்கமாட்டேன். சமுத்திரம் என்னைப்பிரிக்கும்வரை நான் கப்பலைவிட்டு ஒரு இம்மியும் நகரமாட்டேன்'' என்று உறுதியுடன் மறுத்துக்கூறிவிட்டார்.

இவ்வேளையில் அவரின் இரு புதல்வர்களான என். எஸ். ஆபரணமும், என். எஸ். நவரெத்தினமும் ஓடிவந்து மாலுமியின், காலைக் கட்டிப்பிடித்துக்கொண்டு'' அப்பா!'' எனக் கதறினார்கள். எல்லோரும் ஒன்றாகமடியப்போகிறோமே தந்தை மடிவதை மக்களும், மக்கள்மடிவதைத் தந்தையும் பார்க்கும் கொடியவர்களாகி விட்டோம். ''அப்பா அப்பா'' என்று அலறினார்கள். இத்தருணத்திலும் கூட மூடியகண்களை நீக்கிலாப்பிள்ளை அவர்கள் திறக்கவில்லை, ஆனால் குமுறும் எரிமலை வெடிப்பதற்கு முன் அதிலிருந்து பிரமாண்டமான புகை கிளம்புவதுபோல அவரின் மூடியகண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. இந்நேரத்தில் கப்பல் தளத்தின் மேல் மூன்று அல்லது நாலு அங்குல அளவுக்குமேல் தண்ணீர் வந்ததும் அதாவது பாய் மரங்களை விட்டுக் கப்பலின் மற்றைய பாகங்களெல்லாம் கடலில் மூழ்கிவிட்டன அப்போதுதான் எல்லோருக்கும் உணர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. இனி எவ்வித ஆதாரமுமில்லை. இன்னுஞ் சில வினாடிகளுக்குள் அனைவரும் பரந்த சமுத்திரத்துக்குப் பலியெனறு வேறில்லையென்று எல்லோருக்கும் திட்டவட்டமாய்ப்பட்டது



ஜப்பானியரின் நீர்மூழ்கிக் கப்பலினால் கடலினுள் ஆழ்த்தப்பட்ட ''இலட்சுமி கோவிந்தா'' மரக்கலத்தின் தோற்றம்

அப்போது சிப்பந்திகள் அனைவரும் தளபதியைச் சூழ்ந்து கண்ணீரும் கம்பலையுமாய்ப் பிரிந்தார்கள் தத்தம் உயிரைக் காப்பாற்றுவதற்கு, ஆனால் தலைவனின் மக்கள் மட்டும் ''அப்பா, அப்பா, நாம் மடியப்போகுமிந் நேரத்தில் நாங்கள் புழுவாய்த் துடிக்கிறோம். நீங்கள் ஒருவார்த்தை கூடப் பேசாதிருக்கிறீர்களே, அம்மா, அண்ணன், தம்பி எல்லோரும் நம் வரவை எதிர்பார்த்தபடி இருப்பார்களே, நாம் மடிவதை எப்படி அவர்கள் அறிவார்கள் பாவம்! ஒரு வார்த்தையாகிலும் பேசுங்கள். மரணம் வரும்போது பிள்ளைப் பாசங்கூட அற்றுப் போய்விட்டதா அப்பா'' என்று கதறினார்கள்.

அப்போதுதான் எரிமலை வெடித்தது 'மக்களே என் செல்வங்களே!'' என்று அன்றியவண்ணம் மக்களைத் தழுவி ''என்னைப்பற்றிக் கவலைப் படாதீர்கள், நீங்கள் நிச்சயம் சுகமே போய்ச் சேருவீர்கள். அம்மா, அண்ணன், தம்பிமாரைத் தேற்றுங்கள். நான் இல்லாத குறை தெரியாதபடி உங்கள் அம்மாவைக் காப்பாற்றுங்கள். மக்களே அம்மாவின் மனம் நோகப்பண்ணாதீர்கள். என்றும் கடவுள் உங்களைக் காப்பாற்றுவார்'' என்று அழுகைப்பிரலாபத்தோடு, 'போங்கள் மிதப்பங்களை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறியதுதான் தாமதம் ஓர் பூதாகார அலை வந்து இவர்களை மூழ்கடித்துப் பல திசைகளிலும் பிரித்து விட்டது.

இந்நிலையை நாம் யோசிக்கும்போதே தேகமெல்லாம் புல்லரிக்கின்றது. இக்கோர ஆபத்திலிருந்து தெய்வ தீனமாய் உயிர் தப்பியவர்கள் மூன்று பேர்தான். அவர்கள் ஆச்சரியக் குறிப்பை அழுதற்ற அகத்துடனும் நீர் வழியும் கண்களுடனும் எனக்கு உரைக்கும்போது இதை மறுபடியுரைத்தாலும் பெரும் பயங்கரமாயிருக்கிறதென்றார்கள்.

## சீவ மரணப் போராட்டம்

கப்பல் நீருள் மூழ்கியதும் மூன்றாவது குண்டினையடித்த ஜப்பானியரின் நீர்மூழ்கிக் கப்பல் அவ்விடத்தை விட்டகன்றது. போர் முறையின் படி கூட ஒரு கப்பல் இன்னொரு கப்பலை மூழ்கடித்தால கப்பல் மூழ்கடிக்கப்படுமுன் அல்லது மூழ்கடிக்கப்பட்டபின் அக்கப்பலிலுள்ள மாலுமிகளைத் தமது கப்பலில ஏற்றிக் கொள்வார்கள். அல்லது சிப்பந்திகளையெல்லாம் ஓர் ஓடத்தில் இறக்கிவிட்டபின் கப்பலை மூழ்கடிப்பார்கள். ஆனால் இங்கு ஜப்பானியர் ஒன்றுமே செய்யவில்லை கப்பல் மூழ்கடிக்கப்பட்டதும் இவர்களை நிர்க்கதியான நிலையில் விட்டுவிட்டுப் பரிகாசத்துடன் மீண்டும் ஜப்பானியரின் நீர்மூழ்கி கடலுள் சென்று விட்டது

''இலட்சுமி கோவிந்தா'' தாண்டதும் கப்பலிலிருந்த மிதப்புகளும் மற்றும் பலகைகளும் பீப்பாக்களும் மற்றும் மிதக்கக் கூடிய எல்லாப்பொருள்களும் மிதக்க ஆரம்பித்தன பல அரிசி மூடைகள் மிதந்தன. 'மலையே வந்தாலும் தலையே சுமை'' என்பதுபோல் நம் மாலுமிகள் இத்தருணத்திலும் தைரியத்தைக் கைவிடாது கடலில் மிதந்த பலகைகளிலும் மிதவைகளிலும் பிடித்துக்கொண்டு தங்கள் வாழ்வுக்கும் சாவுக்குமிடையே போராடிக்கொண்டிருந்தார்கள். விதி இவர்களைப் பார்த்துச் சிரித்தது. தளபதி நீக்கிலாப்பிள்ளை அவர்களும் மற்றும் மூன்று பேரும் ஒரு பலகையிலிருந்து பலகை கவிழாமல் சமமாக மிதக்கக்கூடியதாய் நீரில் போராடிக் கொண்டிருந்தார்கள். அப்படியே மற்றவர்களும் மிதவைகளைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள்

ஒருவர்பின் ஒருவராய்ச் சுறவுக்குப் பலியாகப் போகின்றோம்; என்றும் எப்படியும் உயிர்தப்ப முடியாதென்றும் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இப்பதினொருவரும் அந்தப் பெரிய பலகைத் தட்டில் நின்றுகொண்டிருந்தனர். பதினொரு பேரும் பலகையில் நின்றபடியால் பலகை சற்றுத் தண்ணீர் மட்டத்துக்குக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் தாகம்

கவிஞர் வாஞ்சிநாதனின் வாஞ்சை "தமிழரின் தாகம்" அதனை தமிழரின் தாகம் தான் வாஞ்சிநாதனின் தாகம் என்றும் கூறலாம்.

ஆறு தலங்களின்மீது அடியெடுத்து வைத்து கவிதைப் பணி வந்துள்ளார் கவிஞர். இங்கெல்லாம் தமிழர் சுகித்த பேரகத்தை, பின்னர் சோகத்தையெல்லாம் சொற்கோவை யாக்கி அதனைக் குறுங்காவியத்தேரேற்றி வைத்துள்ளார்.

'கண்ணீரின் கதையிதனைக் கவிபற்பாட தருணமிது என் பனுவல்...'' என்ற முகப்புக் கவிதையிலேதான் காவியம் வடிக்கப் போந்ததன் காரணத்தை சந்தேகத்துக்கிடமின்றி விளக்கிவிட்டார்.

வாழ்ந்த - வாழுகின்ற - வாழப்போகின்ற சிறுஞ்சிவச் சமுதாயம்தான் தமிழினம் எனவே இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமுதாயம் தன்னைத் தொடர்ந்து வரப் போகின்ற சமுதாயத்துக்கு தனது கடந்த காலத்தையும் சமகாலத்தையும் அதன் வரலாற்று நிகழ்வுகளையும் பொறித்து வைக்கவேண்டிய கட்டாயக் கடமையில் உள்ளது.

என்றோ நடந்து முடிந்துவிட்ட நிகழ்வுகளை 'போஸ்ட்மோட்டம்'' பாணியில் ஆய்வு செய்து எழுதிப் பெறுவதில் உள்ள பயனைவிட சமகால நிகழ்வுகளை வாழும் காலத்திலேயே வடித்துவைப்பது என்பது வருங்கால சமுதாயத்தவர் உண்மை வரலாற்றை உற்றுணர்ந்து கொள்வதற்கு உறுதுணை செய்வதாகும்.

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனின் குறுங் காவியம்கூட அந்தக் கடமையைக் கருதித்தான் கொண்டே படைக்கப்பட்டிருக்கிறது.

திருக்கோணமலைப்பதிகம், மட்டக்களப்புப் பதிகம், வன்னிப் பதிகம், மன்னார்ப் பதிகம், மலையகப் பதிகம், யாழ்ப்பாணப் பதிகம் என ஆறு பதிகளின் பாரம்பரிய மாண்புகளும், சிறிலங்காவின் படையெடுப்பின் பின்னர் அவற்றின் வளங்களில் அப்பகுதி மாந்தர்களின் வாழ்வும் வாழ்க்கை முறையும், பண்பாடு கலாசாரங்களும் பாழடிக்கப்பட்ட வரலாற்றையும் கவிஞர் தமக்கே உரிய பாணியில் கவிதைத் தட்டில்வைத்து நாம் சுவைக்கக் கொடுத்துள்ளார்.

மானோடும், மயிலோடும், தேனோடும், மீனோடும் திருக்கோணமலையைப் பற்றி எழுதப்போந்த கவிஞர் எழுகதிர் எழுந்த பெருநிலத்தில் எழுந்த வரலாற்றை நயம்பட விட்டு 'கொப்பியிலே எழுதிப் படித்த காளையர்கள் குப்பியினைச் சமூகத்தினிலே கட்டிக்கொண்டு துப்பாக்கி தூக்கியதில் தவறென்ன?'' என்று எமக்கிடமே கேட்கின்றார்.

திருமலையின் துன்பியல்களை வரிசைக் கிரமமாய்க் கூறியவர் இறுதியிலே:

"ஏலுமட்டும் போரிடுவோம்
இரத்தக் கடலினிலே
எம்மினிய தாயகத்தை-
மீட்டெடுப்போம்''

என்ற தாகக் குரலோடு அப்பதிகத்தை முடிக்கின்றார்.

இராவணன் பெருமை கூறும் திருமலையைத் தொடர்ந்து இயற்கைவளம் கொஞ்சும் மட்டக்களப்பு மண் பற்றியும் -இன்று அது மாற்றான் கால்பட்டு அடையும் மட்டற்ற துயர்பற்றியும் மட்டக்களப்புப் பதிகத்தில் சொல்லப் புகுகின்றார்

"நீர்வற்றி நெடுவானம்-
பொய்க்காத போதும்
சீர்பெற்ற பெருங்குளங்கள்

## - ஒருநோக்கு -

தலைமையமைத்த மக்கள்''
என்று வெறுமனே உழைப்பாளிகள் மட்டும்தானா?
'வீட்டுக்கு வீடு பாட்டும்,
பல கதையும்,
வீரத் தமிழினத்தின்
சிறப்பான கூத்தும்
நாட்டார் கவியும்,
மந்திரமும் நல்லிசையும்
நாட்டி நின்று தம்மினத்து
தொன்மையினை...
காட்டிக் கலை வளர்த்த
மக்கள் அல்லவா அம்மக்கள்'

வந்தாரை வரவேற்று உணவளித்த அந்த மக்கள் வந்தவரால் அகதியாய் வதையுண்டு சாகின்றார் - வந்தப்பாவி மக்களின் கண்களுக்குப் பயங்கரவாதிகள் யார்?

'பச்சிளம் பாலகரும்...
பிச்சை எடுத்துப் பிழைப்பவரும்...
குச்சு வீடுகளில் கூலிக்கு அவலிடிக்கும் குமரிகளும்...
கிழவிகளும்.. ஓடத்தில இறால் பிடிக்கும் மீனவரும்..''

இப்படியே தொடர்கிறது கவிஞரது சொல்ஜாலம். படிக்கும்போது கவிதைச் சுவையோடு சுருக்கென்று சோகம் தைக்கின்றது.

"பெருமைமிகு மட்டுநகர்
மீண்டுமெங்கள்
பொற்காத்சில் வரும்
நாளே புனித நாளாம்..

என்று முடிகிறது மட்டுநகர் மட்டில் உள்ள தமிழரின் தாகம்.

வன்னி தமிழீழத்தின் சென்னி என்று வன்னிப்பதிகம் தொடர்கின்றது.

செவனிக்குள் நுழைந்த அன்னிய காடையரை அவர் வருணிக்கும் பாங்கே தனிப்பாங்கு. எங்கே கம்பராமாயணத்தில் வரும் அரக்கர்களில் ஒரு பிறவிதான் கென்ட், டொலர் பண்ணைகளுக்குக் குடியேற வந்தனரோ என்று ஒருகணம் எண்ணத் தோன்றுகின்றது: வெலிக்கடைச் சிறையில் வெட்டை ஆடிய வெறிக்கும்பலல்லவா அவை. அசுரனாற்றான் போலும் ஆத்திரம் தீர அவர்களைப்பாடுகின்றார். எப்படி?

"ஆளடிக்கும் கண்ணும்,
அரக்கரவர் வாயும்
அகிலப் பல துர்க்குணங்கள்
கொண்ட நெஞ்சும்
பாழடித்துத் தமிழரினைப்
பரிவின்றிக் கொல்லும்
பாவக்கரமும், பாழுபபும்
பெற்றுள்ளேர்,
காலனவன் மாளிகையின்
காவலரோ என்றஞ்சும்
கொடிய முகமும் கொண்
டுள்ள கயவரவர்''

நவகாலத்தில் வாழும் நாகரிகமற்ற ஒரு கும்பலை என்ன அழகாகத்தமது சொல் ஆளுமையால் கொண்டு வந்துமுன் நிறுத்துகின்றார்!

## □ நாவண்ணன் □

வன்னிமண்ணின நாட்டுவளம் அனைத்தையும் நற்றமிழ் நடையில் நவின்ற கவிஞர் அம்மண்ணதின் இன்றைய இழிநிலையை எண்ணி வெதும்பியவராக அவருக்கு ஏற்பட்ட தாகத்தையும் கூறுகின்றார், அது என்ன?

கடல் அலை முத்துகளைக்
காவிவர...
அம்முத்துகளை கடற்
குருவிகள் கொத்த...
அதுகண்டு பொறாமைப்
பித்துக்கொண்ட ஆட்
காட்டிகத்த...
இத்தகைய இயற்கைச்
சூழலிலே
'இனிய கரைக்காட்சியிலே
மெய்மறந்து
கற்பனையில் மிதந்தே நான்
கவி எழுதும் நாட்களெலாம்
இக்கரையில் ஏற்றமுடன்
இனிவருமோ? -இல்லை.
செததிடுமோ அக்கனவு
சிந்தை எனும் மேடையிலே''

என்றுபுலம்பித்தவிக்கின்றார்.

இதேபோன்று மலையகப் பதிகத்திலும், ஏமாற்றப்பட்டு தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தமிழர்கள் பற்றியும், அவர் கடும் உழைப்பு கூலியினும் அவர் படும் இன்னல்கள் பற்றியும் தொட்டுக்காட்டி முடித்துள்ளார்.

இந்த நான்கு பதிகங்களிலும் நாட்டுவளம், பண்பாடுகளுக்கு முக்கியம் கொடுத்து வந்த கவிஞரின் போக்கில் மன்னார், யாழ்ப்பாணப் பதிகங்களில் காற்று மாறுதல் ஏற்பட்டுள்ளது

இப்பதிகங்களில்தோன்றிய வீரமறவர்கள் வேங்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். முக்கியமாக மன்னார் பதிகத்தில் தளபதி விக்டருக்கும், அவரது வீர சாகசத்துக்கும் - ராதாவின் சாதனைகளுக்கும் முதன்மை கொடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழரின் வீரம், தியாகம், இனஉணர்வு, போராளிகளுக்கு வழங்கும் ஆதரவுபற்றியெல்லாம் கூறியவர் போராளிகளான கிட்டு, பிரசாத், ஜொனி, குலை, அமுதன், சேடில்ஸ், மில்லர். என்ற வீரவேங்கைகளின் பெயர்ப்பட்டியலை நினைவுபடுத்துகின்றார்.

இப்படியாக வீரம் சொழிக்கும் தமிழ்மண் மீது தனிநடைபோட்டு பெருமை பேசிய கவிஞர் இறுதியிலே-

''எதருதாய்கள் இல்லை நாம் தமிழர்
தமிழரின் தாகம் தமிழீழம் ஒன்றுதான்''

என்றுதனது குறுங்காவியத்தை முற்றுவிக்கிறார்.

குறுங்காவியம் என்று நோக்கும் போது மொத்தம் 92 பாடல்களை மட்டும்கொண்டு 26 பக்கங்களுக்குள் அடங்கிய இச்சிறுநூல் சொல்ல வந்த செய்தியோ பெரியது. சுருங்கக் கூறும் முயற்சியில் கவிஞர் வாஞ்சிநாதன் வெற்றிகொண்டுள்ளார். எனினும். இது ஒரு வரலாற்றுக் காவியம் என்று நோக்கும் வாசகனின் தேடலுக்கு வேண்டிய தரவுகள் - விளக்கங்கள் குறைவாக

(7 ஆம் பக்கம் பார்க்க)

---

1942 ல் ஜப்பான்

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கீழே நின்றது ஆகையால் இவர்களின் நெஞ்சு மட்டத்துக்கு நீர் நின்றது. அலை உருண்டு வரும்போது இவர்களை முற்றாக மூடிவிடும். அலை மறைந்த பின்தான் இவர்கள் மறுபடியும் தலை காட்ட முடிந்தது ஒவ்வொரு அலைக்கும் இவ்விதமே நடந்துகொண்டிருந்தது. கடலில் நீர் ஓட்டம் காரணமாக நாலா திசைகளிலும் வெள்ளம், ஒவ்வொருவராய் இழுத்துச் சென்றது.

புறாவும் பூனையும்
ஒத்துழைப்பு

இந்நேரத்தில் அவர்களால் வளர்க்கப்பட்ட புறாக்களும் பூனைகளும் ஒரே பலகையில் மிதந்தனவாம. ஆபத்து வேளையில் மிருகங்களைதானும் தங்கள் பகைமையை நீக்கி ஒன்றுக்கொன்று உதவிசெய்யும்போலும்.

"அருகூட்டும் பைங்கிளியும்
ஆடற் பருந்தும்
ஒரு கூட்டில் வாழும் உலகு.''

என்பது உருசுவகிறது

பெரிய பலகையிலிருந்த பதினொருவரும் காலையில் மற்றவர்களைப் பார்க்கக் கூடியதாயும் இருந்தனர் நேரம் செல்லச் செல்ல இவர்களின் தூரம் வளர்ந்துகொண்டே வந்தது நீக்கிலாப்பிள்ளையவர்கள் இவர்களைப் பார்த்துச் "சேமமாய்ப் போய்ச் சேர்வீர்கள்'' என்று சமிக்ஞை காட்டினாராம. அப்போது புதிரர் இருவரும் துடிதுடித்துக் கண்ணீர் விட்டார்களாம. ஆலவாய்க் கரும்பு போலவும், அனலிற் புழுப்போலவும் அம்புதைத்த மான் போலவும் அலறினார்களாம். மாலையானதும இவர்கள் மற்றவர்களைக்காணக்கூடாத தூரத்திற்கு வெள்ளம் அழுத்துச் சென்றுவிட்டது. மற்றவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டது என்று இவர்களால கூறமுடியாமல் போய் விட்டது. இருள் எங்கும் சூழ்ந்து கொண்டது. குளிரும் அதிகரிக்கத் தொடங்கியது. அன்றியும் கொடிய பயங்கரமான சுறாமீன்கள் விழுங்கிவிடுமோ என்ற பீதியும் இவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அப்படியே மூன்று நாட்களாகப் பட்டினி எனும் கொடிய நோய் தாக்க வாடிவதங்கினார்கள். இந்த மூன்று நாட்களும் மூன்று யுகம்போல இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை.

அவர்கள் தண்ணீரில் இருந்தார்கள். எனினும பருகும் தண்ணீரற்றபாவியானார்கள். "இலட்சுமி கோவிந்தா'' அமிழ்ந்திய இரண்டாம நாள் பதினொருவருள் இருவரான திரு ஜேம்ஸ், திரு ஜெபமாலை என்பவர்கள் பயத்தின் காரணமாக மதியை இழந்தார்கள். ஆகவே இவர்களை மற்றவர்களின் சொற்களையும் மதியாது தங்கள் இஷ்டம் போல கடலுக்குள் திரியத் தொடங்கினார்கள். அவர்களைப் போகவிடாமல் தடுப்பதற்கும் மற்றும் சகோதரர் சக்தியற்றிருந்தார்கள் இருந்தும் இவர்களுக்காக மிகவும் பரிதாபப்பட்டு இவர்களை அங்குமிங்கும் போகவிடாமல் தடுத்துவைக்க மற்றவர்களுக்கு இயலாமற் போய்விட்டது. இதன் விளைவாக இரண்டாம்நாள் இரவு கொடிய சுறாவுக்கு இவர்கள் பலியானார்கள். மூன்றாம் நாள் விடிந்ததும் இவர்களைக் காணாது மற்றைய ஒன்பது பேரும் மனம் வருந்தினர். என்னசெய்வது? தாங்களும் அப்படித்தானே என வ்தயின் சதியை நொந்து கொண்டனர்.

எதிர்பாராத உதவி

மூன்றாம்நாள் அதாவது பங்குனி மாதம் பன்னிரண்டாம் திகதி சூரியன் உதித்ததும் இவர்களுக்கும் நற்காலம் உதிக்கத் தொடங்கி விட்டது. அன்று பதினொரு மணியளவில் முன்பு இவர்கள் கண்ட கப்பலைப்போல் ஒன்றைக் கண்டார்கள். இவர்கள் கண்டது எச் எம். எஸ் எமரல்ட் (H. M. S. Emerald) என்ற ஆங்கிலேயரின் கப்பல். அது வந்து இவர்களைக் காப்பாற்றியதாம். அப்போது ஆங்கிலேயரின் கப்பல் இவர்களைக் காப்பாற்றியிராவிட்டால் அன்றிரவுக்குமுன்னரே அனைவரும் ஒருவர் பின் ஒருவராய் இறந்திருப்பார்களாம். இவர்களைக் காப்பாற்றிய ஆங்கிலேயர் இவர்களின் மற்றைய சகோதரர்களைக் கண்டுபிடிப்பதற்கு விமானத்தை அனுப்பி கடலில் விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து பல மைல் தூரங்களுக்கெல்லாம் சென்று பார்த்தும ஒருவரையும் காணமுடியவில்லை. அப்போது இவர்கள் மற்றும் சகோதரர்களையும் இதே மாதிரியான கப்பல்கள் காப்பாற்றியிருக்குமென மனமாறினர். ஆனால் இதுவரை அந்த ஒன்பது பேரைத் ,விர மற்றையவர்களின் தகவல் ஒன்றும் தெரியாது. இவர்களைக் காப்பாற்றிய ஆங்கிலேயர் எண்ணிறந்த நன்மைகளைச்செய்து இலங்கைக்கு வெகுவிரைவில் இவர்களை அனுப்பிவைத்தனர் இப்பேராபத்திற் சிக்குண்டு தப்பிய பெரும்பான்மையோர் இன்றும் கடலில் நின்று கலங்காது உழைக்கின்றனர். இவர்களின் அஞ்சாமைக்கும் வீரத்திற்கும் இவர்களைப் போற்றவேண்டியது நம் கடமை. இவ்வீரப் புருஷர்களை ஈன்றெடுத்த தமிழ் அன்னை வாழ்க!

---

## 5-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | வீர சுவர்க்கம். |
|---|---|---|
| 8 - 5 - 1967 |  | 17 - 5 - 1986 |

**வீரவேங்கை 'அலெக்ஸ்'**

**(அரிகரன் நாகலிங்கம்)**

நித்தம் நின் நினைவால் இங்கு
சத்தம் வலிமை எய்தி என்றும்
புத்தம் புதிய வளமை பெற்று
நித்தம் பெருமை சேர்த்து உயர்க
தமிழ் ஈழம் உதிக்க நீ
தந்த குருதி உரமாக
பெருமையோடு நாம் வாழ, நீ
அருமை யான வீரவீரம் அமர்ந்து
செழுமை பெற்றுச் செம்மையாய் மலரும்
வழுவிலா ஈழம் காண்க நீ மகிழ்ந்து.

அப்பா, அம்மா, தங்கை
உற்றார், உறவினர்கள்.

புங்குடுதீவு
(B/4513)

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்

## இவ்வார நோக்கு

# போருக்கான அங்கீகாரமா? பேச்சுவார்த்தைக்கான அனுமதியா?



உள்ளூராட்சித் தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு கிடைத்த வெற்றி இதுவரை தமிழர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைக்கான அங்கீகாரமா? அல்லது தமிழர் தேசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை நடத்த கிடைத்த அங்கீகாரமா?

சிறிலங்காவில் கடந்தவார இறுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே. கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது. தேர்தல் நடந்த 236 தொகுதிகளில் 80 வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூராட்சிச் சபைகளை ஐ.தே கட்சி கைப்பற்றியுள்ளது.

தேர்தல் நடந்த பத்து மாநகர சபைகளில் ஒன்பது மாநகர சபைகளையும் முப்பத்துமூன்று நகரசபைகளில் இருபத்தியெட்டிலும் நூற்றுத் தொண்ணூற்று நான்கு பிரதேசசபைகளில நூற்றி ஐம்பத்தி மூன்றையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது. தேர்தல் தோல்வி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமா வோ பண்டாரநாயக்கா அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவிக்கும் அளவிற்கு அவர்களைப் பாதித்தது.

தேர்தலில் மோசடிகள் இடம் பெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ள போதிலும் ஐ.தே. கட்சியின் தேர்தல் வெற்றியில் பெரியளவில் எவரும் சந்தேகம் கொள்ளவில்லை. சிறிலங்கா வந்திருந்த சர்வதேச அவதானிப்புக் குழுவினரும் தேர்தலில் பெரியளவில் மோசடிகள் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்டபோதே இத்தேர்தல் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அவர்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக இருக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். திரு. பிரேமதாஸாவும் இத்தேர்தலை அவ்வாறே எதிர்நோக்கினார். தனது ஆட்சிக்கான அங்கீகாரத்தை மக்களிடம் கோரினார்.

சிறிலங்கா ஜனாதிபதி சிங்கள மக்களிடம் தமது ஆட்சிக்கான அங்கீகாரத்தை மக்களிடம் கோரிய போது வடக்கு கிழக்கில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. இலங்கையின் செல்வமும், வெளிநாடுகளில் பெற்ற கடனும் போரில் விரயமாகிக் கொண்டிருந்ததோடு பெருமளவு உயிரிழப்புக்களும் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதேவேளை சிறிலங்காவில் தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட 60,000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களின் பெற்றோர்கள் அரசிற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். சர்வதேச ரீதியாக மனித உரிமைகள் மீறப்படுவதாகச் சர்வதேச சமூகம் சிறிலங்கா மீது குற்றம் சாட்டிக்கொண்டிருந்தது. அழுத்தங்கள் பிரயோகிப்போம் என சில நாடுகள் மறைமுக எச்சரிக்கையும் விடுத்திருந்தன.

மேலும், வாழ்க்கைச் செலவீடு எக்குறுமில்லாதவாறு அதிகரித்து மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து விலைவாசி ஏற்றத்திற்கெதிரான போராட்டங்களும் இடம் பெற்றன.

அத்தவேளை சிறிலங்காவில் பெரும் எடுப்பில் நடைமுறைப் படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களும், ஜனசவியத் திட்டம், மாணவர் மதிய உணவுத் திட்டம் போன்றவையும் அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களாக மக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந் நிலையில் மக்கள் மத்தியில் வாக்குக்கேட்பதற்குச் சென்ற சிறிலங்கா ஜனாதிபதி எதிர்பார்த்ததை விட பெரு வெற்றி பெற்றுள்ளார். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை, அரச இயந்திரத்தைத் தேர்தலுக்கு முழுமையாகப் பயன்படுத்தியமை, எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மை போன்றவையும் ஐ.தே. கட்சியின் வெற்றிக்குஒரு வகையில் காரணிகளாக இருப்பினும் சிங்கள மக்களும் திரு. பிரேமதாஸாவின் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துள்ளார்கள் என்பதை முழுமையாக மறுக்க முடியாது.

அவ்வாறாயின், கடந்த காலத்திலும் நிகழ் காலத்திலும் ஐ.தே கட்சியின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் சிறிலங்கா மக்களிற் பெரும்பான்மையினர் ஆதரிக்கின்றனரா? அதாவது இன்று நடக்கும் போரையும், அரசாங்கம் தமிழர், சிங்களவர் மீது மேற்கொள்ளும் படுகொலைகளையும், சிங்கள மக்கள் அங்கீகரிக்கின்றார்களா?

மூன்றாம் உலக நாடுகளில் பொருளாதாரநெருக்கடிகளில் வாழும் மக்கள் பெரும்பாலும் கொள்கைக்காக வாக்களிப்பது குறைவாகும். அரசாங்கங்களின் செயற்பாட்டிற்கும், அவர்கள் அளிக்கும்சலுகைகளுக்கும், வகுப்பு வாதஉணர்வுகளுக்கும் ஏற்பவே அநேகமாக வாக்களிக்கின்றார்கள். சிறிலங்காவைப் பொறுத்தும் அதுவே பொதுவாக இடம் பெறுகின்றது.

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் இரண்டு கொத்து அரிசி இலவசமாகத்தருவோம் எனத் தேர்தல் பிரசாரத்திற்கு வாக்களித்த சிங்கள மக்கள் அதனை நிறைவேற்ற சிறிலங்கா சுதந்திரகட்சிதவறிய போது 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் தூக்கி எறிந்தார்கள். உள்ளூர் உற்பத்தியைப் பெருக்கிய பொருளாதாரத்தில் தன்னிறைவு காணப்பட வேண்டும் என்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முற்போக்கான கொள்கைக்கு வாக்களிக்கவில்லை.

அதேவேளை, 1977 ஆம் ஆண்டிற்குப் பின்வந்த ஐ.தே. கட்சியின் ஆட்சியில் ஏற்பட்ட நாட்டின் பொருளாதார சீரழிவு கடன்சுமை, மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் என்பன எதையும் கவனத்திற் கொள்ளாது ஐ.தே. கட்சி வழங்கிவந்த மானியங்களுக்காகவும் செய்து கொடுத்த சிறுவசதிகளுக்காகவும் மக்கள் வாக்களித்துள்ளார்கள் என்றே கொள்ளுதல் வேண்டும்.

அதேவேளை, மறைமுகமாக சிறிலங்காவில் ஐ.தே. கட்சி அரசாங்கத்தால் 60,000க்கு மேற்பட்ட இளைஞர்கள், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டதற்கும், வடக்குக் கிழக்கில் நடந்துவரும் யுத்தங்களுக்கும், படுகொலைகளுக்கும் சிங்கள மக்கள் மறைமுகமாக அங்கீகாரம் வழங்கியுள்ளார்கள் என்பதே வெளிப்படையாகும்.

இதனை வேறொரு உதாரணத்தின் மூலமும் புரிய வைக்கலாம். 1971 ஆம் ஆண்டில் ஜே.வி.பி இயக்கம் தனது முதலாவது கிளர்ச்சியை நடத்திய போது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கிளர்ச்சியை அடக்குதல் என்ற போர்வையில் 15 000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களையும், யுவதிகளையும் கொன்று குவித்தது.

ஆனால், 1977 ஆம் ஆண்டுத் தேர்தலின் போது இப்படுகொலைகள் முதன்மைப் படுத்தப்படவில்லை. 1975 ஆம், 1976 ஆம் ஆண்டு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடே முதன்மைப் படுத்தப்பட்டது. தேர்தலை நிர்ணயித்த விடயமாகவும் உணவுத் தட்டுப்பாடே இருந்தது. இந்த உணவுத் தட்டுப்பாடு இன்றுவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிரான தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிலையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளைவைத்துக்கொண்டு இலங்கையில் தமிழர் தேசிய இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க சிறிலங்கா ஜனாதிபதி முற்படுவார் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட முடியாது.

கொள்கைகளை விட சலுகைகளுக்கும், மானியங்களுக்கும் வகுப்புவாத உணர்வுகளுக்குமே சிங்கள மக்கள் பெருமளவில் வாக்களிப்பதனால் இனப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் உடன் தீர்க்கவேண்டும் என்ற அவசியம் கிடையாது. பொருளாதார அழுத்தங்களும் சர்வதேச அழுத்தங்களும் பேச்சு வார்த்தைக்குத் தூண்டுமாயினும் காலத்திற்கு ஏற்ற ரீதியில் அதனை அதிகாரத்தில் உள்ளவர்கள் தீர்மானித்துக் கொள்ளலாம்.

அதாவது உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு மக்கள் அளித்த வாக்குகள் தமிழர் தேசிய இனப் பிரச்சினைத் தீர்விற்கென அளிக்கப்பட்டதைவிட ஐ.தே. கட்சியின் கடந்த கால செயற்பாட்டிற்கென அளிக்கப்பட்டதே அதிகமாகும்.

அவ்வாறாயின் ஐ.தே.கட்சி இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நடத்தும் யுத்தத்தை அங்கீகரித்து அளிக்கப்பட்ட வாக்குகள் எனவும் கொள்ளலாம். இந் நிலையில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகளை பேச்சுவார்த்தைக்கான அங்கீகாரம் என எவ்வாறு சொல்ல முடியும்?

இந்நிலையில் தேர்தலின் முடிவை ஐ.தே கட்சி தனது தேவையின் பொருட்டு கடந்த காலத்தில் தமிழருக்கு எதிராக நடத்திய யுத்தத்திற்கு கிடைத்த வெற்றி என்றும் கூறலாம். மறுவளமாக இனப் பிரச்சினையின் தீர்விற்கு பேச்சுவார்த்தை நடத்த மக்கள் வழங்கிய அங்கீகாரம் என்றும் சொல்லலாம்.

இதில் எதை ஐ.தே. கட்சி தீர்மானிக்கும் என்பதை தமிழரின் உறுதியான போராட்டமும், மாறிவரும் சர்வதேச அரசியலுமே தீர்மானிக்கும் என்பதே உண்மை.

- ஜெயா

---

தமிழரின் தாகம்...

(6 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வேயுள்ளன என்பது குறையாகவே தோன்றுகின்றது.

அதுகூட பத்திரிகை ஒன்றினுக்கு தொடர்படைப்பாக வழங்கியதால் ஏற்பட்டதன் விளைவாகவே தோன்றுகின்றது. ''காலுக்கு அளவாக பாதணி செய்வதை விடுத்து பாதணிக்கு அளவாக காலை வெட்டிக்கொள்ளும் செயல் போன்று'' இன்றைய படைப்பாளிகள் பத்திரிகைகள் ஒதுக்கும் பக்க அளவுகளுக்கேற்ப படைப்புகளைச் சுருக்கிதமது கற்பனைகளுக்கும், கருத்துக்களுக்கும் எல்லைவகுத்து எழுத வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உள்ளது. இது இன்று தவிர்க்கப்படமுடியாத வேதனை நிகழ்வுதான்.

அது ஒரு புறமிருக்க கவிஞர் வாஞ்சிநாதனின் இக் குறுங்காவிய முயற்சியானது அவருக்கு வெற்றிப்படைப்பு என்றாலும் எதிர்கால சமுதாயத்துக்கு வழங்கவேண்டிய வரலாற்றுக்குறிப்பு என்ற நோக்கில் இக்காவியத்தில் ஒவ்வொரு பதிகங்களில் வரும் தனித்தனி நிகழ்வுகள் எல்லாம் தனித்தனிக் காவியங்களாக விரிக்கவேண்டியவை. இந்த வரலாற்றுத் தேவையை கவிஞர் வாஞ்சி தொடர்ந்து செய்வாரா? செய்யவேண்டும். தொடரட்டும் அவரது தமிழ்த் தொண்டு.

## பதிவுப் பத்திரங்களின் பற்றாக்குறை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு தேவையான பிறப்பு, இறப்பு திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கு இதுவரை காலமும் இருந்த பற்றாக்குறை நீக்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை அலுவலக உயர் அதிகாரிகளுடன் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் போது இம் மாவட்டத்திற்குதேவைப்படும் மேற்படி விண்ணப்பப்பத்திரங்களை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும் ஒவ்வொரு கப்பலிலும் தொடர்ச்சியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்கு இத்திணைக்கள அதிகாரிகளும் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால் யாழ். மாவட்டத்தில் இனிமேல்தாமதமின்றி மேற்படி அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ஈ)

## ஊழியர்களுக்கு எரிபொருள்

(யாழ்ப்பாணம்)

கெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை டாக்டர்களுக்கும், ஊழியர்களுக்கும் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் எரிபொருள் வழங்கப்பட்டது

## பிற்கைறன் தீவு

இத்தீவின் பரப்பளவு 4.5 ச.கி.மீ மொத்தசனத் தொகை (1987 இல்) 63 பேர் ஆவர். உலகின் மிகக் குறைந்த சனத்தொகையைக் கொண்ட நாடாகிய பிற்கைறன்தீவு (Pitcairn Island) பிரித்தானிய முடியாட்சியின் கீழ் உள்ளது. இந்த சனத்தொகை வீழ்ச்சி ஏற்படுவதாக கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. 192) இல் 190 பேர் இங்கு வசித்தனர். ஒரேயொரு பாடசாலை மட்டும் இயங்கும் இத்தீவில் 18 மாணவர்களும் ஒரு ஆசிரியரும் உள்ளனர். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் (கீழ் வகுப்பு மாணவர்கள் உட்பட) 15 வயதுக்கு மேற்பட்டோராவர். ஒரேயொரு தபால் நிலையமும் 3 மோட்டார் வாகனங்களும் உள்ளன. இங்குள்ள அரசியல் மேற்சபையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். பரப்பளவைப் பொறுத்தாவில் இது இரண்டாவது மிகச்சிறிய இடத்தை வகிக்கிறது. கடற்றொழில் இங்கு முக்கிய வருவாயைக் கொடுக்கிறது.

# அமெரிக்கப் படைகளுக்கு பங்களாதேஷில் எதிர்ப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் அண்மையில் இடம் பெற்ற கடும் புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண வேலைகளில் பங்கேற்க வந்த அமெரிக்க கடற்படைகளுக்கு பங்களாதேஷில் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பங்களாதேஷின் நடுக்கடலில் உள்ளசில தீவுகளிலும், தென் கிழக்குக் கரையோரங்களிலும் அமெரிக்க கடற்படையின் 8000 வீரர்கள் வந்துள்ளனர்.

இவர்களின் வருகையை எதிர்த்து பங்களாதேஷின் இடதுசாரிக் கட்சிகள் பல மறியல் போராட்டங்களை நடாத்தியுள்ளன. அவர்கள் வந்த வாகனங்களை எதிர்த்து மக்கள் மறியல் போராட்டமும் நடத்தினர்.

பங்களாதேஷின் இறைமைக்கு அமெரிக்காவின் கடற்படைகள் தங்கியிருப்பது பாதுகாப்பானதாக இல்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## நேபாளிய காங்கிரஸ் தொடர்ந்தும் முன்னணியில்

(காட்மண்டு)

நேபாளப் பொதுத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 185 தொகுதிகளில் 98 இடங்களை நேபாளக் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது. 65 இடங்களில் நேபாள ஐக்கிய மார்க்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது மொத்தம் 205 ஆசனங்கள் உள்ள பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்குநேபாள காங்கிரஸ் கட்சி இன்னமும் ஐந்து இடங்களைப் பெற வேண்டியுள்ளது.

## காரைநகர் மாணவருக்கு மாலைநேர வகுப்புக்கள்

(பண்டத்தரிப்ப)

காரைநகர் மாணவர்களுக்கு மாலைநேர வகுப்புகள் இன்று மாலை ஒருமணிக்கு சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி, வட்டு இந்து கல்லூரி, நாவலர் மகா வித்தியாலயம் பாடசாலைகளில் நடைபெற உள்ளன என பண்டத்தரிப்பு உதவிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

காரைநகர் மாணவருக்கு ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளுக்கு அண்மியதாக இல்லாத மாணவர்களுக்கு அவர்கள் வதிவிடத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் அனுமதி வழங்குமாறும், யாழ் நகரப்பகுதியில் இருந்து 1--4 ஆம் ஆண்டு வரையிலான மாணவர்கள் நாவலர் மகா வித்தியாலயத்துக்கு வருகை தருவதில் கஷ்டங்கள் இருப்பதனாலும் அப் பிள்ளைகளுக்கும் சம்பந்தப்பட்ட அதிபர்களை தற்காலிக அனுமதி வழங்குமாறும் கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார்.

## வேலணைக் காரியாலயம் அல்லைப் பிட்டியில்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர்காரியாலயம் அல்லைப் பிட்டி கிராமத்தில் இயங்க இருக்கின்றது.

தற்பொழுது தீவுப்பகுதியில் இடம் பெற்றுவரும்சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையினாலும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதியுமே இந்தக்காரியாலயம் தற்காலிகமாக இங்கு இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (14)

## சுய வேலைவாய்ப்பும் பயிற்சித் திட்டமும்

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகமானது பெண்களிற்கான சுயவேலைவாய்ப்பு பெறும் பயிற்சித் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தவுள்ளது இத்திட்டத்தில் சகல விதமான மோட்டார் வாகனங்களையும் பழுதுபார்த்துத் திருத்துதல் பற்றி செய்முறையுடன் கூடிய பயிற்சி வழங்கப் படவுள்ளது இப்பயிற்சியானது வார இறுதிநாட்கள் தவிர்ந்த ஒவ்வொரு நாட்களும் நான்கு மணித்தியாலம் வீதம் தொடர்ந்து ஆறுமாதங்களுக்கு நடைபெறும் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் அனைத்துப் பயிற்சியாளர்களிற்கும் தொழில புரிவதற்கான உபகரணத்தொகுதிகள் வழங்கப்படவுள்ளதுடன் அவர்களிற்கான வேலைவாய்ப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். மேற்படிபயிற்சித் திட்டத்திற்கு 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் எவரும் விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு செயலாளர் மறுமலர்ச்சிக் கழகம், யாழ். பல்கலைக்கழகம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு செய்திக்குறிப் பொன்று தெரிவிக்கின்றது.

### தொண்டர் ஆசிரியர் நியமனம்

## தொடர்பான வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நியமனமாக்குவது தொடர்பான வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எதிர்வரும் ஜூன்மாத இறுதிப் பகுதியில் நியமனங்கள்வழங்கப்படுமென கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியலில் மேலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களின் பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாகயாழ் கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1989-91 ஆம் ஆண்டிற்கான தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை நாளை சனிக்கிழமை திருநெல்வேலியிலுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை யாழ். இந்துக் கல்லூரி தொலைக்கல்வி அலுவலகத்தில் இன்று பெற்றுக் கொள்ளுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் ம. செ. அலெக்சாந்தர் தெரிவித்துள்ளார்.

இன்று சர்வகட்சி

சிறிலங்கா ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தினால் விடப்பட்ட அறிக்கையொன்றில் இவ்வாறு கூறப்பட்டது.

க. பொ. த.

வெளியிடுகையில்கடந்தஆண்டு நடைபெறாமல் தடைப்பட்ட அனைத்து கல்விமாவட்டங்களிலும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் பரீட்சைகளை நடாத்துவதற்கு தீர்மானித்திருப்பதாக கூறியுள்ளார்.

இதேகாலப் பகுதியில் இவ்வாண்டுக்கான உயர்தரப் பரீட்சையும் ஆகஸ்ட் மாதம் திட்டமிட்டபடி நடைபெறுமென்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் கூறினர். மேலும் இவ்வாண்டுக்குரிய 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையையும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் பரீட்சை நிலையங்களுக்கான இடவசதி பற்றி மாவட்டக்கல்விப்பணிப்பாளரின் அறிக்கையைப் பொறுத்தே இது தொடர்பான இறுதிமுடிவைத் தெரிவிக்கமுடியுமென்று பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்

## "இன்சூர்" நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினரின்சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட இன்சூர் (நடராசா ஜெயகரன்) அவர்களின் இரண்டாவது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று கோண்டாவில் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெறவுள்ளது. கலைநிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வெல்லாவெளியில்

கோயில்களிலும் தஞ்சம் புகுந்து வாழ்கின்றனர். இவர்கள் தமது நாளாந்த உணவுத் தேவைக்கு பெரிதும் கஷ்டப் படுவதால் அரசின் அகதிகள் நிவாரணக் கொடுப்பனவுகளையே நம்பி வாழவேண்டிய நிலை இருந்து வருகின்றது.

விவசாயிகளை

செய்தனர். இச்சமயம் அங்கு வேலை செய்துகொண்டிருந்த மக்கள் சிதறி ஓடிவிட்டனர்.

இதனைத்தொடர்ந்து அங்கு சென்ற தமிழ் ஊர்காவல் படையினர் இராணுவத்தினரைக் கடுமையாகத் தாக்கினர். இத் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது இராணுவத்தினர் திரும்பி முகாமிற்கு ஓடிவிட்டனர். அவர்களுக்கு ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரிய வரவில்லை.




### ஆணைக்குழு அறிக்கைவரை

## எம். எஸ். எப். சேவையை இடைநிறுத்தியுள்ளது

(கொழும்பு)

எம். எஸ். எப். எனப்படும் பிரான்ஸ் மருத்துவ தொண்டர் நிறுவனத்தின் தலைவர் நேற்று கொழும்பில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்துப்பேசியுள்ளார் இச் சந்திப்பின் பின் செய்தியாளரிடம் பேசிய ஜனாதிபதியின் சர்வதேசவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நட்புறவுடன் சந்திப்பு நிகழ்ந்ததாக கூறினார்.

எம். எஸ் எப் இனர் தமது சேவையை இடைநிறுத்தியுள்ளதாகவும், எனினும் 25பேர் கொண்ட மருத்துவக்குழு இலங்கையில் தங்கியிருந்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் செய்தியாளரின் கேள்விக்குப்பதிலளித்த திரு. பிரட்மன்வீரக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

## செயலக ஊழியருக்கு போக்குவரத்து வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்தின் தூர இடங்களில் இருந்து செயலகத்துக்கு கடமைக்கு வரும் ஊழியர்கள் இதுவரை காலமும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இச்சிரமங்களைத் தவிர்க்கும் முகமாக யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் இப்போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முன்முயற்சிகளை எடுத்து வருவதாக செயலகத்தில் இருந்து எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன (க)

சிங்களவர் கேட்க

குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகள் வரக் கூடாது. இதெல்லாம் நடக்காது

இப்போதுள்ளது தான் எமது சகஜ வாழ்க்கை. இதன்மத்தியிலதான் நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். பதுங்கு குழிக்குள்ளும் பாடசாலையை நடத்துவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் போராட்டத்தில் முழுமையாக இணைந்து கொள்ள வேண்டிய காலம் இது. உலகம் தலைசிறந்த தலைவராகப் பிரபாகரனைப் பார்க்கிறது. எமக்குச் சக்திமிக்கப் படையுள்ளது. அதில் நீங்களும் ஏன் அணிதிரளக் கூடாது எமது படை பிரதேச வேறுபாடுகளைமறந்துபோராடியது. காங்கேசன்துறைமுதல் அம்பாறைவரை ஒன்றுபட்டு இந்தப்படை போராடியது. இதனால்தான் இந்தியப்படை பின்வாங்கியது உலகத்தில் எவராலும் எம்மை வெல்ல முடியாது. உலகத்தில் நான்காவது பெரிய படையை வென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குப் பின்னர் ஏன் முழுமையாகச் சேர்ந்து நிற்க முடியவில்லை என்று நாம் சிந்திக்க வேண்டும் என்றார்.

மனநிலை மாறவேண்டும். மனப்பக்குவம் வேண்டும். எம்மிடம் இருக்கும் காணி நிலங்களை உள்ளூர் உற்பத்திப் பெருக்கத்திற்காகக் கொடுக்க வேண்டும். எமக்கு. போராளிகளுக்கு மண்ணில் எதுவுமே சொந்தமாகக் கிடையாது. இந்த மண்ணிலே உள்ள போராளிகள் உங்கள் சகோதரர்கள்; உங்கள் பிள்ளைகள். வீட்டை மறந்து இருபத்திநான்கு மணிநேரமும் உழைக்கிறார்கள். செத்து மடிந்த பிறகுதான் தாய், தந்தையரும் பார்க்கிறார்கள். வரலாற்றை மாற்றியமைக்கக் கூடிய போராட்ட இயக்கம் எம்முடையது. இந்தப்படையினால்தான் எமதுஎல்லைகளை மீட்கமுடியும் என்றார் அவர்.

இந்த நினைவு நாளிலே லெப். கேர்ணல் நவத்தை நினைவு கூருவதில் தான் மகிழ்ச்சி அடைகிறதாகவும், மணலாற்றுக் காட்டிலே மிகப் பெரிய போராளியாகவும், அவரை ஒரு வழிகாட்டியாகவும் சந்தித்ததாகவும், எதற்குமே கலங்காத மனோதிடத்தைக் கொண்ட இவர் முல்லை மாவட்டப் பொறுப்பாளியாக இருந்துகுறுகிய காலத்திலேயே வீரமரணம் அடைந்தார் என்றார்.

வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மனோ, முல்லை மாவட்ட கலை,கலாசாரப் பொறுப்பாளர் சங்கர், வட்ட அவைத் தலைவர் க. ஜெகதீஸ்வரன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் சோபிகா ஆகியோரும்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தைத் தொடர்ந்து பல்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது